விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 10 வெள்ளிக்கிழமை (26.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 342

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நேற்று நால்வர் சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் மற்றும் பிரதியமைச்சர்கள் மூவர் உட்பட நால்வர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

சமூக நலன்புரி விவகார சிரேஷ்ட அமைச்சராக மில்ரோய் பெர்ணான்டோ சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதுடன், வெளிவிவகார பிரதியமைச்சராக நியோமல் பெரேரா, அரச வளங்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ மயமாகும் நாடு அச்சத்தில் வாழும் மக்கள்

### ஐக்கிய தேசியக் கட்சி கவலை

(கொழும்பு)

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தடுப்பு முகாம்களை அமைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதால் நாடு இராணுவமயமாகும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரிய நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றில் தெரிவித்தார். வரவு செலவுத்திட்டம் மீதான விவாதம் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இன்று எதிர்க் கட்சிகள் தமது கருத்துக்களை வெளிப்படையாக சொல்ல முடியாத நிலையில் உள்ளது. பாதுகாப்புக்காக ஏன் அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனக் கூட கேட்கமுடியாது. முன்னாள் இராணுவத் தளபதியை சிறைக்குள் அடைத்து பழிவாங்கும் அரசாங்கம் அவருக்கு சார்பாக சுவரொட்டிகளை ஒட்டினால் கூட எதிரியாகத்தான் பார்க்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஓர் சர்வாதிகாரி என கட்சியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவை ஓர் ஜனநாயகத் தலைவராக கருத முடியாதென (16ஆம் பக்கம் பார்க்க)

## கிருஷ்ணா தலைமையிலான குழுவினர் நேற்று இலங்கை வந்தடைந்தனர்

### நாளை யாழ்ப்பாணத்துக்கு வருவர்

(கொழும்பு)

**இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவும் நேற்று கொழும்பை வந்தடைந்தனர். இந்திய-இலங்கை கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்துக்கு இணைத் தலைவராக தலைமை தாங்கவுள்ள கிருஷ்ணா இவ்விரு நாடுகளுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு உடன்படிக்கைகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவுள்ளார்.**

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று மாலை 4.40 மணியளவில் இலங்கையை வந்தடைந்தார்.

இந்தியாவின் விசேட வானூர்தி ஒன்றின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் (16ஆம் பக்கம் பார்க்க)

## நியூயோர்க் ரைம்ஸின் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கடும் கண்டனம்

### அறிக்கை அனுப்பினார் கோஹண

(நியூயோர்க்)

யுத்தக்குற்றவாளிக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பதவி என பிரபல நியூயோர்க் ரைம்ஸ் ஊடகம் வெளியிட்டிருந்த அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வாவின் நியமனம் தொடர்பில் நியூயோர்க் ரைம்ஸ் வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதி நிதி டாக்டர் பாலித கோஹண ,நியூயோர்க் ரைம்ஸ் ஆசிரியருக்கு கண்டன அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டி கோவில் விவகாரம் ஜனவரியில் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

முறிகண்டிப் பிள்ளையார் கோவிலை பரம்பரை தர்மகர்த்தாவிடம் ஒப்படைக்கக் கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு எதிர்வரும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

ஏ-9 வீதியில் அமைந்துள்ள மேற்படி கோவிலின் முன்னாள் தர்ம கர்த்தா மணிவண்ணன் கோவிலின் புனிதத்தைக் கெடுக்கும் வகையில் அதனை வர்த்தக ரீதியாக பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் இந்து கலாசார விவகார திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் தனது சொத்தை தன்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டியே நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தன்னிடம் இருந்து (16ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் வாகனம் மோதி இளம் பெண் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் கே.கே.எஸ். வீதியில் பன்றிகோட்டு பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த சோபா நோபல் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

கே.கே.எஸ்.வீதியூடாக யாழ். நகரை நோக்கி சைக்கிளில் சென்று கொண்டி (16ஆம் பக்கம் பார்க்க)



## அமைச்சர் பசில் தலைமையில் வலி.வடக்கில் மீள்குடியமர்வு

### நாளை நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

தெல்லிப்பழை பிரதேச பிரிவுக்குட்பட்ட இளவாலை வடக்கு ஜே/221, இளவாலை வட மேற்கு ஜே/222, வித்தகபுரம் ஜே/223 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான மீளக்குடியமர்வு ஆரம்ப நடவடிக்கைகள் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கீரிமலை நகுலேஸ்வர ஆலய பகுதியில் மீள்குடியமர்வு ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இதுவரை மேற்படி பகுதிகளுக்கு மீள்குடியமர்வதற்கு பதிவு செய்த குடும்பங்கள் அன்றைய தினம் காலை 6 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (ச-2)

## கூட்டமைப்பிலிருந்து பியசேன நீக்கப்படவில்லை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவை கூட்டமைப்பிலிருந்து இதுவரை நீக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து நீக்கிவிட்டதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை எனவும், (16ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் 26 எலும்புக்கூடுகள் முல்லைத்தீவிலிருந்து மீட்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் புலிகளால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக அரச தரப்பினரால் தெரிவிக்கப்படும் 26 படையினரது எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டதாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தடுப்புக்காவலில் உள்ள முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து முல்லைத்தீவு-பரந்தன் வீதியில் 9 கிலோ மீற்றர் தூரத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் காட்டுப்பகுதியில் இந்தப் புதைகுழி இரண்டு நாட்களாக தோண்டப்பட்டுள்ளது.

இந்தப் புதைகுழியைத் தோண்டுவதற்கென 100 பேர் கொண்ட குழுவொன்று அங்கு சென்றிருந்தது. மேற்படி காட்டுப் பகுதியில் புலிகளின் சிறோ வன் பேஸ் என்ற பெயரில் முகாமொன்று செயற்பட்டு வந்திருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

சிறை (16ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# யுத்தத்தைத் தடுப்பதற்காகவே பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கீடு

## சந்திரகுமார் எம்.பி. மன்றில் உரை



(கொழும்பு)

யுத்தம் முடிபடைந்துள்ள சூழலில் மீண்டும் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவது யுத்தத்தை தடுப்பதற்காகவே என்பதை இலங்கை சூழலை சரியாகப் புரிந்து கொண்டவர்களால் உணர்ந்து கொள்ள முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

அடுத்த ஆண்டுக்கான முக்கியத்துவம் வாய்ந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போது நாட்டின் அபிவிருத்தியையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்த வரவு செலவுத் திட்டம் இன்று எமது நாடு எதிர்பார்க்கின்ற அத்தனை தேவைகளையும் தாராளமாக நிறைவேற்றிவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

அவ்வாறானதொரு வரவு செலவுத் திட்டமானது கற்பனைக்கு உகந்ததாக இருக்குமேயல்லாது நடைமுறையில் சாத்தியமாக அமையாது.

மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் ஒரு வரவு செலவுத் திட்டம் முதன்மையளித்திருக்குமானால் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

30 ஆண்டுகாலப் போரின் பாதிப்புகள் என்பது சாதாரணமானதல்ல. ஆகவே அதை மாற்றவேண்டிய பொறுப்பும் கடமையையும் இந்த வரவு செலவுத் திட்டமும் இந்த மன்றும் கொண்டிருக்கின்றன. இதை இங்கே நான் அழுத்தத்துடன் வலியுறுத்த விரும்புகின்றேன்.

யுத்தம் முடிந்துள்ள சூழலில் மீண்டும் பாதுகாப்பிற்கு அதிக நிதி ஒதுக்கப்படுவது யுத்தத்தைத் தடுப்பதற்காகவே என்பதை இலங்கை சூழலை மிகச் சரியாக புரிந்து கொண்டவர்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

அது உண்மையில் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காகவே என்றே அர்த்தப்படும்.

ஆனால் நாட்டின் அபிவிருத்தியையும் சமூகங்களின் பாதுகாப்பையும் சமூக ஒருமைப்பாட்டையும் சரியான சொல் நெறியில் கொண்டு சென்றால் பாதுகாப்புக்கான செலவீனத்தை எதிர்காலத்தில் குறைத்துக் கொள்ள முடியும்.

இந்தத் தேசத்தின் பிரஜைகள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன முரண்களையும் பாரபட்சங்களையும் வளர்த்துக்கொண்டு மக்களுக்கான வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி சிந்திக்க முடியாது.

மக்களுக்கான வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி சிந்திக்க வேண்டுமானால், இன முரணையும் சமூக முரண்களையும் களைய வேண்டும்.

இன முரணையும் சமூக முரண்களையும் களையவேண்டிய பொறுப்பு சிங்களத் தரப்பிற்கும் தமிழ்த் தரப்பிற்கும் சம விகிதத்தில் உண்டு.

ஏ 9 வீதி, பரந்தன் - மன்னார் வீதி, பரந்தன் - முல்லைத்தீவு வீதி, மாங்குளம் - முல்லைத் தீவு வீதி என்பவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட போதும் மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் ஏனைய வீதிகள் இன்றும் மாரிகாலத்தில் சேறாகவும் கோடை காலத்தில் புழுதியாகவும் மக்களை துன்புறுத்தும் கிறவல் வீதிகள் என்ற நிலையில் தான் இருக்கின்றன.

இந்த நிலையில் இருந்து மாற்றம் பெறுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லாமலே இவை இருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மீள் குடியமர்ந்துள்ள மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் திரும்பும் வகையில் விவசாயத்திலும், கடற்றொழிலிலும் பல்வேறு வகையான உதவித் திட்டங்களை பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு மிகப்பெரிய பரப்பளவில் 54 ஆயிரத்து 889 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்ளக்கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டுள்ளதை எமது அரசினுடைய சாதனையாகவே கருதுகிறேன்.

இதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ காட்டிவரும் அக்கறைகள் முக்கியமானதாகும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் தேசத்திற்காக தம்மை அர்ப்பணித்த படை வீரர்களுக்கான சிறப்பான செயற்திட்டங்கள் உள்வாங்கப் பட்டுள்ளமையைப் போன்று போரினால் பாதிக்கப்பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்கும் அநாதரவாக்கப் பட்ட சிறுவர்களுக்கும் துணைவரை இழந்த பெண்களுக்கும் சிறப்பான செயற்திட்டங்கள் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

வறுமையை ஒழித்தல் என்ற இலக்கு நோக்கிய எமது தேசத்தின் பயணத்தில் பல்வேறு வகையான தடைகளைக் கடக்க வேண்டியுள்ளது. குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் மீளகுடியேற்றப்பட்டதன் பின்பும் தமது வாழ்வாதாரத்தை உருவாக்கிக் கொள்வதற்கான அடிப்படைகளை இன்னும் பெற்றுக்கொள்ளாத புறச் சூழ்நிலைகளையும் இந்த மன்றின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டி உள்ளது.

இப்போது உருவாகியிருக்கும் யுத்தமற்ற சூழ்நிலையானது நாட்டையும் மக்களையும் புதியதொரு வாழ்க்கைச் சூழலுக்குள் பிரவேசிக்க வைக்கவேண்டும். நாடு இன்னொரு இருண்ட யுகத்தினுள் எக்காரணம் கொண்டும் சிக்க முடியாது. இதற்கு முரண்பாடுகளை களைய வேண்டும். முரண்பாடுகளைக் களைவதும் பகையை மறப்பதும் சமாதானத்திற்கான அடிவைப்பாகும் என உலகம் வலியுறுத்தி வருகிறது. இது ஒரு அடிப்படையான உண்மையும் ஆகும்.

பகையை வளர்ப்பது குறுகிய அரசியல் ஆதாயங்களுக்குப் பயன்படலாம் ஆனால் அது நிச்சயமாக நாட்டையும் சமூகங்களையும் பேரழிவிற்கே கொண்டு செல்லும். நடந்த பேரழிவுகள் இலங்கைத் தீவில் இருக்கும் ஒவ்வொரு குடிமக்களுக்கும் பாடங்களாகும்.

ஆகவே அமைதிக்கான வழிமுறைகளை பற்றிச் சிந்திக்கும் போது முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அவசியமும் அதற்கான அரசியல் தீர்வும் எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் இந்த நாட்டின் முரண்பாடுகளுக்கான தீர்வும் அமைதியும் இணைந்திருக்கின்றன. நிரந்தர அமைதியிலும் பாரபட்சமற்ற நடைமுறைகளிலும்தான் ஒரு நாட்டின் அபிவிருத்தியும் எதிர்காலமும் தங்கியிருக்கின்றன என்பதை தெளிவுபடுத்தி அமர்கிறேன் என்றார். (ச)

## தமிழரசுக் கட்சியின் செயற்குழு தெரிவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளையின் செயற்குழுத் தெரிவுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு சுழிபுரம் பறாளாய் வீதியில் அமைந்துள்ள நாவலர் சனசமூக நிலையத்தில் இலங்கை தமிழரசுக்கட்சி சிரேஷ்ட துணைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் செயற்குழு தெரிவு செய்தல்,புதிய அங்கத்தவர்களைத் இணைத்தல் ,இன்றைய அரசியல் நிலையில் கட்சியின் செயற்பாடுகள் ,உள்ளூராட்சித் தேர்தல் பற்றி ஆராய்தல் போன்ற விடயங்கள் இடம்பெறவுள்ளதாக அக்கட்சியின் யாழ்.மாவட்டக்கிளைச் செயலாளர் சூ.சே.குலநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## ரங்காவுக்கும் பிரபாவுக்கும் விரைவில் பிரதி அமைச்சுப் பதவி

(கொழும்பு)

ஐ.தே.க விலிருந்து அரசாங்கத்துக்குத் தாவிய ஸ்ரீ ரங்கா, பிரபா கணேசன் மற்றும் மனூஷ நாணயக்கார ஆகியோருக்கு மிக விரைவில் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்று தெரிகின்றது பதவி வழங்கப்பட்டிருந்தால் அது ஆளுங்கட்சிக்குள் சிக்கலை உருவாக்கியிருக்கும் என்பதன் காரணமாக அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வழங்கப்பட்டவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் அவர்கள் மூவருக்குப் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்று தெரிகின்றது.

அத்துடன் எதிர்வரும் நாட்களில் இன்னும் சில அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படவுள்ளதாகவும், தற்போதிருக்கும் 33 பிரதியமைச்சர்களுக்கு மேலதிகமாக இன்னும் 18 பிரதியமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

## மின்சாரம் நாளை தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5 மணி வரை சுன்னாகம் ,குப்பிளான் ,மயிலங்காடு,ஏழாலை ,காங்கேசன் துறை ,உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங்கப் படலாம் என யாழ்.பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ச)






## வன்னி கல்வி வலய ஆசிரியர்களுக்கு இலவச பஸ்சேவை நிறுத்தப்படும்

### ஆளுநர் அறிவிப்பு

வன்னி கல்வி வலயங்களிற்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான இலவச பஸ் சேவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களுக் குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாணசபையினால் இலவச பஸ் சேவை நடத்தப்படுகிறது.

இந் நிலையில் தற்போது வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் சீராக நடைபெறுவதனாலும் ஆசிரியர்களுக்கான பருவகால பயணச்சீட்டு வழங்கப்படுவதனாலும் இவ் இலவச பஸ் சேவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்படுகின்றது.

எனவே ஆசிரியர்கள் அனைவரும் தமது பருவகால பயணச் சீட்டை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (ச-5)

## கிளிநொச்சி அரச அதிபர் இரகசிய வாக்குமூலம்

(கொழும்பு)

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் இரகசிய சாட்சியமளித்துள்ளார். லக்ஷ்மன் கதிர்காமர் மன்றத்தில் முன்னாள் சட்டமா அதிபர் சீ.ஆர்.டி.சில்வாவின் தலைமையிலான குழு வினர் முன்னிலையில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் சாட்சியளிக்க வந்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் இரகசியமான முறையில் சாட்சியமளிப்பதாக தெரிவித்ததை அடுத்து அவரிடம் இரகசிய சாட்சியம் பெறக்கட்டது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் இவ்வாறு இரகசியமான முறையில் சாட்சியமளித்தால் வெளிச்சத்திற்கு வரா பல உண்மைகள் ஆணைக் குழு முன்னிலையில் அம்பலமாக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (ச-5)


யாழ் மாவட்ட

## பேக்கரி உரிமையாளர் சங்கம்

பதிவு இல : 649
TEL : 021 222 3814

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

யாழ்மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சங்க தலைவர் திரு.இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இதில் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முக்கிய கவனிப்பு : குறித்த நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஏற்றவாறு அனைவரும் வருகை தரவும்.

நன்றி

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கா.பாஸ்கரன்,
செயலாளர்.

(சி-1671)

# இன்று ஒரு தகவல்

## தூக்கம் வரவில்லையா?

உலகத்தில் பல்வேறு விடயங்களை ஆராய்ச்சி செய்வதற்காக ஆராய்ச்சிக் கூடங்கள் உண்டு. அதுபோன்று தூக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கும் ஒரு ஆராய்ச்சிக் கூடம் உண்டு.

அமெரிக்காவின் பாஸ்டன் பல்கலைக்கழக மருத்துவமனையில் தான் அது இருக்கிறது.

அங்கே தூக்கத்தைப் பற்றி பலவிதமான ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஆராய்ச்சிக் கூடத்தில் இயக்குநரான சான்போர்ட் ஆவர்பாக் என்ன சொல்கிறார் தெரியுமா?

"உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா? நீங்கள் நன்றாகத் தூங்குவதற்கு சிலயோசனைகளை என்னால் கூற முடியும்.

உணவு, மனநிலை, தூங்குமிடத்தின் சூழ்நிலை, படுக்கைக்குச் செல்லும் போது உள்ள பழக்க வழக்கங்கள் போன்ற காரணங்களால் ஒருவருக்குத் தூக்கமின்மை ஏற்படலாம். தூக்கமின்மைக்கு இவைதான் காரணமென்றால் அதையெல்லாம் சுலபமாக கட்டுப்படுத்தலாம் என்கிறார் அவர்.

தூக்கத்தை வரவழைக்கக் கூடிய ஒரு நல்ல மருந்து உடற்பயிற்சி தான். உடலை அயர்ச்சியுற வைக்கும் உடற்பயிற்சி தூக்கத்தை வர வழைக்கும்.

ஆனால் தூங்கப் போகும் போது இப்படியான உடற்பயிற்சிகளை செய்யக் கூடாது. பகலிலேயே இந்தப் பயிற்சிகளைச் செய்வது நல்லது.

தூக்கம் வராமல் அவதிப்படுபவர்கள் பிற்பகலில் கோப்பி, தேநீர் போன்ற பானங்களை அருந்தக் கூடாது.

மது அருந்துவதும் தூக்கத்தைப் பாதிக்கும்.

வெதுவெதுப்பான நீரில் குளிப்பது, தியானம் செய்வது, ஓய்வாக இருப்பது, தூங்குவதற்கு முன் ஒரு டம்ளர் பால் குடிப்பது இவையெல்லாம் தூக்கத்தை வரவழைப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இன்னொரு விஷயம்.

தூங்கியே விடவேண்டும் என்ற கவலை வேண்டாம். அப்படி நினைத்துக் கவலைப்படுவதை விட்டுவிடுங்கள். தூக்கம் வர வில்லையா?

உடனே படுக்கையை விட்டு எழுந்து வெளியே வாருங்கள். வேறேதாவது வேலையில் ஈடுபடுங்கள். சிறிது நேரம் உலாவுங்கள். அல்லது ஏதாவது புத்தகம் படியுங்கள். களைப்பு ஏற்பட்டால் மறுபடியும் படுக்கைக்குப் போய்விடுங்கள்.

தூக்கம் தானாக வரும். ஒரு விஷயத்தை மட்டும் நன்றாக ஞாபகத்தில் வைத்திருங்கள். படுக்கைக்கு நன்றாக ஞாபகத்தில் வைத்திருங்கள். படுக்கைக்குப் போகும் போது எல்லாப் பிரச்சினைகளையும் மறந்து விடுங்கள். 'அது எப்படி முடியும்?' அந்த நேரம் தானே எல்லாப் பிரச்சினைகளும் வரிசையாக ஞாபகத்துக்கு வருகிறது" என்று நாம் நினைக்கலாம்.

ஆனால் பழக்கத்தினால் நாம் அதை மாற்றிக் கொள்ள முடியும். சிறிது முயற்சி செய்ய வேண்டும். அவ்வளவு தான்?

இவையெல்லாம் ஆராய்ச்சி மூலம் அறியப்பட்டவை தான்.

இன்னொரு விஷயத்தையும் அவர் கூறியுள்ளார்.

அது என்னவெனில் உடற்கோளாறு காரணமாக தூக்கம் வராமல் அவதிப்படுபவர்களுக்கெல்லாம் இந்த யோசனைகள் பொருந்தாது. என்கிறார் அவர். அவற்றுக்கெல்லாம் மருத்துவ சிகிச்சை கொடுத்துத்தான் சரிப்படுத்த வேண்டும்.

சிலருக்கு நள்ளிரவில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு தூக்கமின்மையால் அவதிப்பட நேரிடும்.

ஊரெல்லாம் தூங்கும்போது தான்மட்டும் தூங்காமல் விழித்துக் கொண்டிருப்பது, ஊரெல்லாம் விழித்துக் கொண்டிருக்கும் போது தான் மட்டும் தூங்குவது போன்ற கோளாறுகளில் சிலபேர் பாதிக்கப்படலாம்.

கால்தசை முறுக்கிக்கொள்வதால் சிலபேருக்கு அடிக்கடி விழிப்பு வரலாம். மனஅழுற்சி காரணமாக சிலருக்கு தூக்கம் வராது. இது போன்ற கோளாறுகளுக்கெல்லாம் அதற்குத் தகுந்தாற் போல் சிகிச்சையளித்துத்தான் குணப்படுத்த வேண்டும்.

எந்தக் கோளாறுமில்லாமல் தூக்கம் வரவில்லையானால் ஆரம்பத்தில் சொன்ன முறைகளைக் கடைப்பிடித்துப் பார்க்கலாம். தூக்கம் வந்ததென்றால் யோசனை சொன்ன அந்த நிபுணருக்கு நன்றி சொல்லலாம். ஒருத்தர், "ஏன்சேர்? பஸ்ஸில் தூங்குவது கெட்ட பழக்கமா?" என்று கேட்டார்.

"இல்லையே! நான் கூட பஸ்ஸில் போகும்போது தூங்கிக் கொண்டு தானே போவேன்" என்றார் இன்னொருத்தர்.

"அப்படியென்றால் ஏன் என்னை டிரைவர் வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள்?" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பேருந்து தரிப்பிடங்களை நிறுவ உரிய தரப்பினர் முன்வர வேண்டும்

## வன்னிப் பகுதி மக்கள் கோரிக்கை

வன்னிப் பகுதியில் பேருந்து தரிப்பிடங்கள் இல்லாததால் பொது மக்கள் பலத்த சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் முன்னர் பிரதான வீதிகளுக்கு அருகில் பயணிகளின் நலன் கருதி 300 மீற்றருக்கு ஒரு பேருந்துத் தரிப்பிடம் என்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தன.

எனினும் போர்ச் சூழலின் பின்னர் இராணுவத்தினரால் இப்பேருந்துத் தரிப்பிடங்கள் பெருமளவில் அகற்றப்பட்டுள்ளன.

இதன் காரணத்தால் தற்போது பொது மக்கள் மழையில் நனைந்தபடி மரங்களின் கீழ் பேருந்துகளிற்காக காத்து நிற்பதை காண முடிகின்றது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்தி செயற்படுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ)

## அமரர் கணேசலிங்கத்தின் 4 ஆம் ஆண்டு நினைவுதினம்

அமரர் க.கணேசலிங்கத்தின் நான்காம் ஆண்டு நினைவு தினம் இன்று காலை 9 மணிக்கு பேராசிரியர் மா.நடராசசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இவர் கொழும்பு மாநகர சபை முதல்வராகவும், ஐக்கிய தேசியக் கட்சியில் 36 ஆண்டுகள் பொருளாளராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## பரிசளிப்பு விழா

யா/ தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும் தரம் 5 புல்மைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கா. இராமஜெயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகராட்சி மன்ற செயலாளர் அ. நடராசா, சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில்களை திருமதி மனோன் மணி நடராசா வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-24)

# இராசி பலன்

**26.11.2010**
**(கார்த்திகை 10, வெள்ளிக்கிழமை)**
**பஞ்சமி முன்னிரவு 7.05 மணி வரை**
**புனர்பூசம் முற்பகல் 7.51 மணி வரை**
**இராகுகாலம் 10.42-12.12 மணி வரை**
**சுபநேரம் 6.12-7.42 மணி வரை**

**மேடம்** தொகை எதிர்பார்த்த படியே வந்து சேரும், பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியம் வெற்றி பெறும், புதிய பணிக்கு அத்திவாரமிடுவீர்கள்.

**இடபம்** மூத்த சகோதரர், உங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிவர், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், இனிய தகவல் வந்து சேரும்.

**மிதுனம்** நாவன்மையால் நற்பெயர் எடுக்கும் நாள், தொழில் நன்மையுண்டு, கடினமான வேலையைக் கூட இலகுவாகச் செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும்.

**கடகம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பயணங்களின் மூலம் நல்ல செய்திகளைப் பெறுவீர்கள், நண்பர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

**சிங்கம்** விருந்தினர் வருகையால் கூடுதல் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை அதிகரிக்கலாம், காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை அமையலாம்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், நீங்கள் தேடிச்செல்ல நினைத்த நபர் உங்கள் வீடு தேடிவரலாம், எதிர்காலத்தை வளமாக்க வழிசமைக்கும் நாள்.

**துலாம்** வழிபாட்டில் ஆனந்தப்படும் நாள், தொழிலில் புதிய அபிவிருத்திகள் செய்யும் எண்ணம் உருவாகும், சொல்லை செயலாக்கி காட்டும் நாள், குடும்ப மகிழ்ச்சியுண்டு.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், உஷ்ண சம்பந்தமான ஆரோக்கியக் குறைவுண்டு, பிரயாண பலனுண்டு, பொருட் சேர்க்கையுண்டு.

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, பிரயாணத்தில் கூடிய கவனம் தேவை.

**மகரம்** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், செல்வாக்கான நாள், தொழில் முன்னேற்றமுண்டு, பழைய நண்பர்களை சந்தித்து மகிழும் நாள்.

**கும்பம்** போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள்.

**மீனம்** பிள்ளைகள் வழியில் சுபசெலவுகள் ஏற்படலாம், பாராட்டும், புகழும் கூடும், பூர்வீகச் சொத்துக்களால் சிறு ஆதாயம் கிடைக்கும், வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும்.

வளவன்

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(கரவெட்டி)

பருத்தித்துறை லீக் அனுமதியுடன் பருத்தித்துறை கிறிஸ்தவ வாலிபசங்கம் நடாத்தும் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான அணிக்கு 5 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளையும் நாளை மறுதினமும் காலை 6 மணிக்கு அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இவ்உதைபந்தாட்ட போட்டிகளில் 33 கழகங்களில் இருந்து 44 அணிகள் பங்குபற்ற உள்ளன என்று பருத்தித்துறை லீக் செயலாளர் ரி.வரதராஜன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-24)

# மர்மநபர்களின் தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(கரவெட்டி)

இனந்தெரியாத மர்மநபர்களின் தாக்குதலுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த காயங்களுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத் தெருவில் இடம் பெற்றுள்ளது.

வீட்டிலிருந்து கடற்தொழிலுக்கு சென்று கொண்டிருந்த வேளை வழிமறித்த மர்மநபர்கள் குடும்பஸ்தரை கண்ணிலும் தலையிலும் கடுமையாக தாக்கிவிட்டு அருகில் உள்ள கடையில் வீசிவிட்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் வெற்றிலைக்கேணி இடைக்காட்டைச்சேர்ந்த பிலிப் பைன்ஸ் தேவநாயகம் (வயது 31) என்ற குடும்பஸ்தரே பலத்த காயங்களுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-24)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|
| மரக்கறி வகைகள் | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 50 |
| தக்காளி | 80 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 60 | 40 |
| கரட் | 40 | 80 | 40 |
| பூசணி | 50 | 40 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 130 | 90 |
| பெரிய வெங்காயம் | 110 | 150 | 120 |
| பாகற்காய் | 120 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயற்றங்காய் | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 70 | 20 |
| கறிமிளகாய் | 100 | 140 | - |
| முருங்கைக்காய் | 200 | 200 | 180 |
| போஞ்சி | 80 | 110 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 90 | 40 |
| கீரை - 1 பிடி | 15 | 25 | 15 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-40 |

# மாகாண மட்ட கணித வினாடி வினாப் போட்டி முடிவுகள்

(அல்வாய்)

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தால் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கணித வினாடிவினாப் போட்டியில் வெற்றியீட்டியோரின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**தமிழ்மொழி மூலம்**

தரம் 6

கே.ஜோண்சன் (யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, ஏ.கௌசிகன்(யா/மீசாலை வீரசிங்கம் ம.வி) ஆர். தேவதயா (வு/றம்பைக்குளம் ம.வி.)

தரம்–7

என்.டிலக்கேஸ்வரன்(யா/கொக்குவில் இந்துக்கல்லூரி),வி.சாளினி(யா/கரணவாய் ம.வி.), ரி.அபிஷேகா(யா/ நெல்லியடி ம.ம.வி)

தரம் –8

சி.தனுசன் –நெலுக்குளம் கலைமகள் ம.வி.,எஸ்.தேனகா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),எம். கவிப்பிரியா(யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி)

தரம் –9

கே.மதனாகரன் (யா/ நெல்லியடி ம.ம.வி.,ஜெ.ஆன்சாளினி பீரிஸ் (ம/சென் சேவியர் பெண்கள் கல்லூரி), ஏ.கிருசாந்(யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி),

தரம் –10

ஆர்.ஜனார்த்தனன் (யா/ மகாஜனாக் கல்லூரி), பி.கௌசல்யா(யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஏ.பானுசா(யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),

தரம் –11

எம்.கஸ்தூரி (யா/வடமத்திய மகளிர் கல்லூரி), ஆர்.கீர்த்தனா(யா/அருணோதயா கல்லூரி, பி.லக்ஷிப்பிரியா (யா/நெல்லியடி ம.ம.வி.)

**ஆங்கில மொழி மூலம்**

தரம் –6

ஜெஸ்.லக்ஷிகா (யா/ நெல்லியடி ம.ம.வி.), ஏ.காஷ்ரோ டிறோன் (யா/ சென் பத்திரிசியார் கல்லூரி), எஸ்.ஜொயில் பிரவின் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி)

தரம்–7

எம்.சங்கீர்த்தனா (யா/வட மத்திய மகளிர் கல்லூரி), ரி.பாசுபதன் (யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.), வி.மதனிகா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

தரம் –8

பி.மேசிகன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஆர்.கீர்த்திகா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எம்.துசிதா(யா/நெல்லியடி ம.ம.வி.)

தரம் –9

வி.விதுர்ஷா (யா/ நெல்லியடி ம.ம.வி.), எம்.காயத்திரி(வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எஸ்.சர்வகணன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

தரம் –10

பி.தாருகீசன்(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), யு.கீர்த்தனா (யா/வட மத்திய மகளிர் கல்லூரி), ஜெ.றாஜேந்தர்(யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

தரம் –11

ஆர்.பிரணவன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), எஸ்.சஞ்ஜிகா (யா/ நெல்லியடி ம.ம.வி.), கே.கிருஷ்யாகினி (யா/ வட இந்து மகளிர் கல்லூரி). (ஸ்ரீ–19)

# நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசைத் தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மண்டபத்தில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசை நிகழ்வும் யாழ் .பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜாவின் சிறப்புச் சொற்பொழிவும் மற்றும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் சேர்ந்த செல்வி பூ.செல்வதியம்மாவின் பேச்சும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ–2)

# கலந்துரையாடல்

(அல்வாய்)

பாடசாலை மட்டத்தில் உள்வாரி, வெளிவாரி மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள சகல வலயங்களிலும் கடமையாற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பான பிரதிக்கல்வி பணிப்பாளர்களும் சகல கோட்டக் கல்வி பணிப்பாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு. இராதா கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–19)

# மரம் நடுகையும் டெங்கு ஒழிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் ''மரம் நடுகையும் டெங்கு ஒழிப்பும்'' எனும் செயல் திட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும் முதலாம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களும் கல்வியியலாளர்களும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே இந்நிகழ்வில் சகல உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும் மாணவர்களின் பதிவேட்டுடன் தவறாது சமுகமளிக்குமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2)

# தேசிய திருமறைக்கலாமன்ற தினமும் மரியசேவியர் அடிகளாரின் பிறந்த தினமும்

(கொழும்புத்துறை)

தேசிய திருமறைக்கலாமன்ற தினமும் பேராசிரியர் ந.மரியசேவியர் அடிகளாரின் பிறந்த தினமும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து போதி பூஜா, பள்ளிவாசல் தொழுகை, இந்துக் கோவில் பூசை என்பன நடைபெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து 9.30 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத் தூதுமணி மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் இதில் பங்குபற்றி இரத்ததானம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு இலங்கையிலுள்ள திருமறைக்கலாமன்ற கலைஞர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் யாழ். திருமறைக்கலாமன்றம் வழங்கும் நாட்டிய நாடகமும் சிறப்பு நிகழ்வாக இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ–51)

# ஒளிர்வில் ஓராண்டு



அமரர்

**கந்தையா பொன்னம்பலம்**

(முல்லை, கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களின் முன்னாள் அரசாங்க அதிபர்)

திதி: 30.11.2010

**மண்ணில் 30.06.1934 — விண்ணில் 26.11.2009**

மீண்டும் மீண்டும் நினைக்கின்றோம்
எங்களுக்குள்ளே அவர் வாழ்கின்றார்
உங்களுக்குள்ளே அவர் உறவாகி நிற்கின்றார்
தாயக மண்ணில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களாய்
படித்த பெண்களின் முதல் விவசாயக் குடியேற்றமாய்
பட்டதாரிகள் மண்வளம் பெருக்கும் குடியேற்றங்களாய்
முத்தையன்கட்டு முதல் முள்ளிவாய்க்கால் வரை பரந்து கிடக்கும்
மண்வள கடல்வள மக்கள் அறிவு வளர் திட்டங்கள் பலவாய்
மக்களுக்குச் சக்தியளிக்கும் சமூக உள்வாங்கல் எண்ணங்களாய்
அவர் தம் அறிவு ஆற்றல் அனுபவம் எங்கும் விரிந்து கிடப்பதை
**மீண்டும் மீண்டும் நினைக்கின்றோம் உங்களுடன் சேர்ந்து!**

பொருளாதார இறுக்கக் காலத்து காணி அதிகாரியாய்
விவசாயத்திட்டங்கள் கொண்டு கிளிநொச்சி மக்களை வாழவைத்தார்
போராட்ட காலத்து மூன்று மாவட்டங்களின் அரசாங்க அதிபராய்
அதுவும் நவாலி தேவாலய குண்டு வீச்சு
நாகர் கோயில் பள்ளிமீதான குண்டு வீச்சு முதல்
பொருளாதாரத் தடைகள் மருத்துவ மறுப்புக்கள்
1995இன் பாரிய இடப்பெயர்ச்சியெனப் பல சோதனைகள் கண்டு
அரச அதிபருக்கே மெய் உரைத்து வாதாடிய அஞ்சாநெஞ்சினராய்
பணிவிடுத்தும் மண்ணையும் மக்களையும் அறிவுரையால் வழி நடத்திய
**உங்கள் உறவான அவரை மீண்டும் மீண்டும் நினைக்கின்றோம்!**

பழம்பாசியில் எல்லா ஆண்களும் இன அழிப்புக்குள்ளான வேளை
இரத்தக்குளியலில் கிடந்தோருக்கு இறுதிக்கிரியைகள் செய்த துணிவினை
தனது முல்லை மண்ணின் வளங்களும், மக்களும் பட்ட துன்பங்களைக்
கேட்ட மாத்திரத்தே இங்கிலாந்திலிருந்து யாழ். வந்த மறுநாளே
ஆவிகலங்கி அடங்கும் அளவுக்கு உங்கள் மேல் கொண்ட பேரன்பை
உங்களுடன் சேர்ந்து மீண்டும் மீண்டும் ஓராண்டாய் நினைக்கின்றோம்
அவர் அன்பு செய்த அனைவரையும் அவரை அன்பு செய்த எல்லோரையும்
இவ் ஓராண்டாய் நன்றியுடன் நாம் மீண்டும் மீண்டும் நினைக்கின்றோம்
**ஓராண்டல்ல ஒரு யுகமானாலும் எங்களுக்குள்ளே அவர் என்றும் வாழ்ந்திருப்பார்!**

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்.**

(3126)

# கடற்றொழிலாளர் கூட்டுறவுசங்க சமாச கட்டடம் புனரமைப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச கட்டடத்தை புனரமைப்பு செய்வதற்கு போரூட் நிறுவனம் 2 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இக் கட்டடம் கடந்த யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே போரூட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட இந் நிதியை கொண்டு கீழ் தளத்தை புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ–35)

# ஆரம்பக்கல்வி மாணவர்களின் பரிசளிப்பு விழாவில் பரிசில் பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள மாகாணமட்ட ஆரம்பக்கல்வி மாணவர்களின் பரிசளிப்பு விழாவில் பரிசில் பெறும் வலிகாமம் வலயத்துக்குட்பட்ட மாணவர்களின் விபரம் வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

**கோலம்**

பி.பதீசன் (யா/அராலி சரஸ்வதி ம.வி), எம்.இசைப்பிரியா (யா/மகாஜனக்கல்லூரி), பி.மதுசனா (யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வி)

**திருக்குறள் மனனம்**

மேரி றிஸ்கான் (யா/மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க.பா.), என்.சுவர்ணா (யா/ அருணோதயாக் கல்லூரி)

**IMaCS**

கே.ஜிதுர்சன் (யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ), ரி.டிஸ்கானி(யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), டிலக்சன் (யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தி)

**வாய்ப்பாடு மனனம்**

பி.சங்கவி (யா/மகாஜனக்கல்லூரி), கே. கேணுகா (யா/அராலி சரஸ்வதி வித்தி.), ஜே. எமரென்சி (யா/இளவாலை கன்னியர்மடம்)

**சிறுவர் அரங்கம்**

வலிகாமம் (யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

**புலமைப் பரிசில் பரீட்சை**

தாரணி பாலேந்திரன் (யா/உடுவில் மகளிர் கல்லூரி), துரைராஜா அருண்குமார் (யா/ இராமநாதன் கல்லூரி), எல்.ஸ்ரீகர்ஷன் (யாழ்ப்பாணக் கல்லூரி. (ஸ்ரீ–2)

# பருத்தித்துறை நகராட்சி மன்றம் அறிவித்தல்கள்

**ஆதனவரி அறிவித்தல்கள் 2011**

ஆதன மதிப்பீட்டிற்கமைவாக 2010 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த ஆதனவரித் தொகை களே 2011ஆம் ஆண்டிற்கும் அவ் ஆதனங்களுக்கு செலுத்தப்படற்பாலானது என்றும் இவற்றிற்குரிய ஆதனவரி அறிவித்தற்படிவங்கள் தனித்தனியாக விநியோகிக்கப்பட்டு வருகின்றனவெனவும் வரியிருப்பாளர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது. இவ்வாதனவரி அறிவித்தல் படிவங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாம். ஆட்சேபனைகள் இருப்பின் இவ்வறிவித்தல் கிடைத்து ஒருமாத காலத்திற்குள் நகரசபை அலுவலகத்தில் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாதனவரித் தொகைகள் 2011ஆம் ஆண்டு மார்ச் -31, ஜூன்- 30, செப்ரெம்பர் -30, டிசம்பர்- 31 ஆகிய திகதிகளில் காலாண்டுகளுக்கு ஒரு தடவை செலுத்தப்படவேண்டும். 2011 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டின் முழு ஆதனவரியையும் செலுத்தினால் 10% வரிக்கழிவும் ஒரு காலாண்டிற்குரிய வரியை அக்காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தினால் 5% வரிக் கழிவும் வழங்கப்படும். குறித்த காலாண்டினுள் ஆதனவரி செலுத்தப்படாவிட்டால் அதற்காக முறையே தரிசு நிலம், வதிவிடங்களுக்கு 15%மும் வியாபார நிலையங்களுக்கு 20%மும் பற்றாணைச் செலவாக (தண்டம்) அறவிடப்படும்.

மேலும், உரிய காலங்களில் அக் காலப்பகுதிக்குரிய ஆதனவரி செலுத்தப்படாவிட்டால் குடியிருப்பாளரின் பொருட்கள் நடுக் கட்டல் செய்யப்படும் எனவும், நகரசபை கட்டளைச் சட்டத்தின் 255ஆம் அத்தியாயம் 170ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 252ஆம் அத்தியாயமான மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 243ஆம் பிரிவின் பிரகாரம் வாடகைக்காரர் தாங்கள் குடியிருக்கும் ஆதனங்களுக்குரிய வரியைச் செலுத்தி அத்தொகையை வாடகையிலிருந்து குறைத்துக்கொள்ளலாம். அத்துடன் சிவப்புப்பத்திர அறிவித்தல் அனுப்பப்பட்ட ஆதனச் சொந்தக்காரர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் ஆதனவரி நிலுவைத்தொகை முழுவதையும் ஒரே தடவையில் செலுத்துதல் வேண்டும். பகுதிபகுதியாகச் செலுத்துதல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பது குடியிருப்பாளர்களின் கவனத்திற்கு அறியத்தரப்படுகின்றது.

புதிதாக காணி கொள்வனவு செய்தவர்களும் நகரசபை ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்களும் தமக்குரிய ஆதனங்களை நகரசபை ஆதனவரிப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகரசபை அலுவலகத்தில் சமர்ப்பித்து பெயர்மாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இதுதொடர்பான மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

இந்நகரசபை எல்லைக்குட்பட்டோர் தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயினும் அல்லது பழைய கட்டடத்தினை திருத்துவதாயினும் நகர சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.

அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் நகரசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள், மதில்கள் தொடர்பாக ஆதனச் சொந்தக்காரர் மீது குறித்த சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**காணி உப பிரிவிடுகை**

ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு காணித்துண்டினைக் கொள்வனவு செய்ய நேரிடும் சந்தர்ப்பத்தில் பிரிவிடல் (அனுமதி வழங்கப்பட்ட) நில அளவைப் படத்திற்கு அமைவாக எழுதப்பட்ட உறுதி பெயர் மாற்ற நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்வாறு காணி பிரிக்கப்படும்போது நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாகக் காணி பிரிவிடப்படுதல் வேண்டும். இவ்வாறு பிரிக்கப்படும் ஒவ்வொரு துண்டுகளும் 150சதுர மீற்றர் (அண்ணளவாக குளி10.7)க்குக் குறையாது பிரிக்கப்படல் வேண்டும். இவ் விடயம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

**சூழல் பாதுகாப்பு உரிமம்**

சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 'ஆ' பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்படி தொழிலை/வியாபாரத்தினை நடத்துபவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி இவ் உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். இவ் உரிமம் பெறாது மேற்படி தொழில்கள்/வியாபாரம் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன் அத்தகையவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

**வியாபார உரிமம் 2011**

சகல வியாபார/தொழில் நிலையங்களும் தங்கள் வியாபாரத்திற்கான தொழில் மீதான வரி, வியாபார உரிமம், வியாபார வரி என்பன கோரும் விண்ணப்பப்படிவத்தினை நகரசபை அலுவலத்தில் பெற்றுப் பூர்த்திசெய்து சமர்ப்பித்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி உரிமத்தினை/பற்றுச் சீட்டினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 31.03.2011ஆம் திகதிக்கு முன் உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

**வாகனங்கள், மிருகங்களுக்கான உரிமம் 2011**

இந் நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்டோர் தமது வளர்ப்பு நாய்களுக்கும் துவிச்சக்கர வண்டிகளுக்கும் 2011ஆம் ஆண்டிற்குரிய உரிமத்தை 31.03.2011ஆம் திகதிக்கு முன்னர் இவ் அலுவலகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு அறியத் தரப்படுகின்றது.

திரு.அ.அ. நடராசா,
செயலாளர்,
நகரசபை,
பருத்தித்துறை.

நகரசபை,
பருத்தித்துறை,
22.11.2010

(சி - 1670)

# கரைச்சி உதவி அரச அதிபருக்கு திடீர் இடமாற்ற உத்தரவு!

## கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச உதவி அரசாங்க அதிபர் சுலோஜினி திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவ் இடமாற்றத்திற்கு எதிராக கரைச்சிப் பிரதேச மக்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்பு ஊர்வலங்களையும் நடத்தி வருகின்றனர். இதுகுறித்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

கரைச்சிப் பிரதேச உதவி அரச அதிபர் சுலோஜினி தன்னை மதிக்கவில்லை என்றும் தான் எடுக்கும் முடிவுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது குறித்து அப்பிரதேச மக்கள் கருத்து தெரிவிக்கும் போது,

இறுதிக் கட்ட யுத்தத்தின் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை புரிந்து செயலாற்றியவர் உதவி அரச அதிபர் சுலோஜினி. இவரது இடமாற்றமானது மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் வரை எமது போராட்டங்கள் தொடரும். இவ்வாறான ஒரு உணர்வு பூர்வமான செயலதிகாரியை நாம் இழக்க விரும்பவில்லை.

கடந்த காலங்களில் எமது மீள் குடியேற்றம் தொடர்பில் விரைந்து செயற்பட்டவர். மக்களுக்கு சேவையாற்றுகின்ற அரச ஊழியர்கள் பலர் கடந்த காலங்களில் இடமாற்றம் என்ற போர்வையில் அச்சுறுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான தொடர்ச்சியான இடமாற்றங்கள் மாவட்டத்தின் சுமுகமான செயற்பாடுகளிற்கும் இயல்பு வாழ்க்கைக்கும் குந்தகமாக அமைந்து விடும் என அஞ்சப்படுகின்றது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த காலங்களில் இரணைமடு காந்தபுரம் பிரதேசம் இராணுவத்தினரின் தேவைகளுக்காக கேட்கப்பட்டது.

எனினும் இதற்கு மறுப்பு தெரிவித்த உதவி அரச அதிபர் அப்பகுயில் மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவ்வாறான பின்னணியிலே இவரது பணி இடமாற்றம் செய்யப் படுவதாக தெரிவிக்கப் படுகிறது. (ச-5-7)

# தமக்கு இடையூறு ஏற்படுமென சாட்சியாளர்கள் கருதினால் இரகசிய முறையில் சாட்சியமளிக்கலாம்

## நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு

இடையூறு ஏற்படக்கூடுமென சாட்சியாளர்கள் கருதினால் வேறு வழிகளைப் பயன்படுத்தி சாட்சியமளிக்க முடியும் என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறி வித்துள்ளது.

சாட்சியாளர்களுக்கு இடையூறு ஏற்படுத் தப்பட்டதாக அண்மையில் வெளியான செய்திகளுக்கு பதிலளிக்கும் வகையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

முன்கூட்டியே அறிவிப்பதன் மூலம் இரகசியமாக சாட்சியமளிக்க முடியும் எனவும் கமராவின் முன்னிலையில் சாட்சியமளிக்க முடியும் எனவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு குறிப்பிட்டுள் ளது.

தமது சொந்தப் பிரதேசத்தில் ஆபத்து ஏற் படும் என கருதினால் இரகசியமான முறை யில் கொழும்பில் சாட்சியங்களை முன் வைக்க முடியும் என மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. வே. பாலசுப்பிரமணியம்

(B.A (Hons), Dip in ED, PGDEM, MED, SLPS -I)




கோப்பாய் கோட்டக்கல்வி
அதிகாரியாக
பதவி உயர்வு பெற்ற
திரு.வே. பாலசுப்பிரமணியம்
அவர்களை மென்மேலும்
பல பதவியுயர்வுகள் பெற்று
பல்லாண்டு காலம்
நீடுழி வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
சுந்தரலிங்கம் குடும்பம்,
ஜெயந்தன் குடும்பம்,
தயாநாதன் குடும்பம்,
(ஜேர்மனி)

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(3128)

# வவுனியா, யாழ்ப்பாண பணியகங்கள் மூடப்பட்டாலும் கொழும்பு பணியகத்தினூடாக எமது பணி தொடரும்

## ஐ.சி.ஆர்.சி. அறிவிப்பு

நவம்பர் 15 ஆம் திகதி முதல் இலங்கையில் ஐ.சி.ஆர்.சியின் புதிய பேராயத் தலைவராக ஈப் ஜீயோவனோனி பதவியேற்றுள்ளார். இவர் ஐ.சி.ஆர்.சியுடன் ஏறக் குறைய 25 வருட காலங்களாக பணியாற்றி வருகிறார். இக்காலங்களில் ஐ.சி.ஆர்.சி யின் பேராயத் தலைவராக முன்னர் எதியோப்பியா, இஸ்ரேல், பலஸ்தீனப் பிரதேசங்கள், ஜோர்தான் மற்றும் குரேசியா போன்ற நாடுகளில் பணியாற்றியுள்ளார். அத்துடன், மத்திய ஆசியப் பிராந்திப் பேராயத்தினதும் இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பகுதிகளுக்கான ஐ.சி.ஆர்.சியின் நடவடிக்கைகளிலும் தெற்காசிய பிரிவினதும் தலைமை பேரளாராக பணிபுரிந்துள்ளார். அங்கோலா, நிக்கரகுவா, பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலும் இவர் ஐ.சி.ஆர்.சிக்காக பணியாற்றியுள்ளார். திருமணமான ஜீயோவனோனி தனது நான்கு பிள்ளைகளுடன் குடும்பமாக இலங்கை வந்துள்ளார்.

உலகளாவிய ரீதியிலும் முக்கியமாக இலங்கையிலும் ஐ.சி.ஆர்.சியின் பங்குப் பணி பற்றி தனது கருத்தை அவர் இங்கு முன்வைக்கிறார்.

**ஐ.சி.ஆர்.சி. யானது அதன் பணிகளை மோதல் சூழ்நிலைகளில் தான் மேற்கொள்ளும் என்பது அறியப்பட்ட ஒரு விடயம். இலங்கையில் மோதலானது மே 2009 இல் முடிவுற்றுள்ளது. தற்போதைய நிலைமைகளில் இலங்கையில் ஐ.சி.ஆர்.சி. யினது பங்குப் பணி என்ன?**

ஆயுதமோதல்கள் முடிவுற்றிருக்கும் ஏனைய பல நாடுகளைப்போன்று ஆயுத விளைவுகளால் நேரடிப் பாதிப்புள்ளானவர்களுக்கும் மேலும் தொடர்ந்து வரும் தேவைகளுக்கும் ஐ.சி.ஆர்.சி. தனது மனிதாபிமான பணிகளைத் தனக்குள்ள ஆணை அதிகாரத்துக்கு அமைவாக தொடர்ந்தும் செய்து வருகின்றது. தேவைகளானவை உண்மையில் குறிப்பிடும் அளவு சூழ்நிலைமைகளை பொறுத்து வீதியாசத்தை கொண்டிருக்கலாம்.

இலங்கையில் அங்கவீனமாக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் தமது வாழ்க்கையை கொண்டு செலுத்த அவர்களுக்கு செயற்கை அவயவங்களும், இறுதிக்கட்ட மோதல்களின் போது இடம்பெயர நேரிட்டு மீண்டும் தமது இடங்களுக்கு திரும்பிச் செல்வோர் தமது ஜீவனோபாய முயற்சிகளில் ஈடுபட, குறிப்பாக ஆண் உழைப்பாளியை இழந்த குடும்பங்களுக்கு குறுகியகால அல்லது நடுத்தரகால உதவிகளும் தேவைப்படுகின்றது. இவ்விதம் மீள செல்வதற்குரிய காலமும் அதன்போதான அவசர தேவைகளும் மோதல்கள் முடிவுற்று நீண்ட காலத்திற்கு அதாவது இரண்டு வருடங்களுக்கு மேலாகவும் அவசியமானதாக நீடித்துச் செல்லலாம்.

சர்வதேச செஞ்சிலுவைச் செம்பிறை இயக்கத்தின் எம் சக பங்காளியான முக்கியமாக, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் நாம் உதவிகளை நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குகிறோம்.

இதன் பின்னர் மதிப்பீடுகளை மேற்கொள்வதன் மூலம் உதவிகளின் நிறைவின்மையை முடிந்தளவு அறிந்து அதற்கேற்ப, குறைகளிருப்பின் அவற்றை நிவர்த்தி செய்கிறோம்.

மற்றைய நாடுகளைப் போன்று மோதல் நாழ்நிலைகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரையும் தொடர்ந்து ஐ.சி.ஆர்.சி. பார்வையிட்டு வருகின்றது. அவர்கள் விடுதலையாகும் வரை அவர்கள் குடும்பங்களுக்கும் தொடர்ந்து உதவிகள் அழித்து வருகிறது.

**வவுனியா மற்றும் யாழ்ப்பாண பணியகங்களை மூடிவிடும்படி அரசு உங்களை கோரியுள்ளதா?**

ஆம், இது உண்மை. ஆயினும், மூடிவிடுவதற்கான கால அளவு பற்றி தீர்மானித்து முடிவெடுக்கப்பட வேண்டியுள்ளது. இது, தவிர்த்துக்கொள்ள முடியாதவாறு தொடர்ந்து நிலவும் மனிதாபிமான தேவைகள், நாம் இனி மேற்கொள்ளவுள்ள நிர்வாக மற்றும் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள் போன்றவற்றிலான தாமதங்களைப் பொறுத்தே அமையலாம்.

இவ்விடயங்கள் பற்றி மிக விரைவில் நாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசவுள்ளோம்.

**இலங்கையில் தனது நடவடிக்கைகளை ஐ.சி.ஆர்.சி. குறைத்துக்கொள்ள உள்ளதா?**

ஆம், நிச்சயமாக போர் இடம்பெற்ற காலங்களில் பெரியளவில் அது நீண்ட காலத்திற்கு செயற்பட்டது போல் ஐ.சி.ஆர்.சி. தனது நடவடிக்கைகளை இனியும் தொடருமென நான் எதிர்வுகூறவில்லை. அதிர்ஷ்டவசமாக போரின் நேரடியான தாக்கங்கள் படிப்படியாக மறைந்து வருகின்றன. இருப்பினும் மனிதாபிமான தேவைகள் இன்னும் இருந்த வண்ணம் உள் ளன.

எல்லாத் தேவைகளும் என்றில்லாது, அதாவது உடல் ஊனமுற்றோர் அல்லது பல ஆண்டுகளாக சிறையில் இருப்போரின் தேவைப்பாடுகளாக அத்தேவைகள் அமையலாம். ஆனாலும் பெரும்பாலான அவசர கால உதவிகள் இறுதியில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விடலாம்.

நாம் அரச அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட முகவர் களுடன் ஆலோசித்து வருவதன் மூலமாக, நடவடிக்கை குறைப்பு ஏற்பட உள்ளமையானது முழுமையாக விளங்கிக் கொள்ளப்பட்டதொன்றாக இருக்கிறது.

எதிர்வரும் 29 ஆம்திகதி ஏற் கனவே செப்ரெம்பர் மாதம் எம்மால் தீர்மனிக் கப்பட்டபடி ஐ.சி.ஆர்.சி.யின் மன்னார் பணியகத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஓர் சிறிய நிகழ்வொன்றில் நான் கலந்து கொள்ளவுள்ளேன்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் உள்ள ஐ.சி.ஆர்.சி. பணியகங்கள் மற்றும் சக ஊழியர்களைத் தரிசித்து அங்கு மேற் கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் மற்றும் தேவைகளில் அவர்களின் நடவடிக்கைகள் குறித்து தெளிவினைப் பெற இருக்கிறேன்.

இரு சக்கர உளவு இயந்திரங்கள், விவசாய மற்றும் கடற்றொழில் உபகரணங்கள் போன்ற வடபகுதி விநியோகத்திற்கென தீர்மானிக்கப்பட்ட முக்கியமான சொத்துக்கள் இன்னும் ஐ.சி.ஆர்.சியிடம் உள்ளது அவற்றை எவ்வாறு விநியோகிப்பது அல்லது மாற்று வழிமுறை தீர்வுகளை இனங்காணும் வகையில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது அதேவேளை ஐ.சி.ஆர்.சி யினால் நேரடியாக நிர்வகிக்கப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் எதிர்காலத்தில் நாட்டில் ஒரேஒரு பணியகமாக செயற்பட எதிர்பார்க் கப்படும். கொழும்பு பணியகம் 'ஊடாக மேற் கொள்ளப்படும்.

**இலங்கையில் தற்போது எவற்றிற்கு ஐ.சி.ஆர்.சி. முன்னுரிமை அளிக்கிறது?**

குறுங்கால நடவடிக்கை என நோக்கின், தொடரும்மனிதாபிமானத் தேவைகளில் செயற்படசம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் முகவர்களுடன் ஒருங்கிணைந்து அவர்கள் முயற்சியான நீண்ட கால அபிவிருத்திகான வழியினை தயார்ப்படுத்துவதிலும் விரைவான மீளச்செல்லல் முயற்சிகளில் மேற் குறிப்பிட்ட தரப்பினருக்கு நாம் உதவுவதே ஆகும்.

இத் தேவைப்பாடுகள் அவற்றின் தன்மைக்கேற்ப காலப்போக்கில வேறுபட்ட வேகங்களில் குறைந்து செல்லலாம். தற்போதைய நிலையில், அதிகாரிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடபகுதி மீளத்திரும்பியோருக்கான உதவிப் பொருட்தொகுதியின் விநியோகம் வவுனியா மற்றும் யாழ்ப்பாண பணியகங்களை மூடுவதற்கான நேரகாலத் தில் தங்கியிருப்பதுடன், (எமது மன்னார் பணியகம் நவம்பர் 29 உடன் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி மூடப்படவுள்ளது) செப்டெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட எம் இவ் உதவிப் பொருட்தொகுதியின் விநியோகத்தை பூரணப்படுத்துவதற்கான வழிகளை இனங்காணல் அல்லது மாற்று வழிமுறைகளை இனங்காணலை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளோம்.

இது தொடர்பில் மேலும் பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் முகவர்களுடனும் நடாத்தவுள்ளோம். காலப் போக்கில் செஞ்சிலுவை செம்பிறை இயக்கத்தின் எமது சக பங்காளியான ஈ.செ.சி. சங்கம் மேலும் வேறு செயற்றிட்டங்களை பொறுப்பேற்க கூடும் எனவும் அவர்கள் பணித்திட்டங்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான ஆதரவை நாம் அவர்களுக்கு வழங்கிடலாம் எனவும் எண்ணுகின்றோம். யாழ் ஜெய்ப்பூர் வலு விழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் அதன் பணிகளை வட பகுதியில் தொடர்ந் தும் வழங்கிடுவதை உறுதி செய்வதும் ஐ.சி.ஆர். சிக்கு முக்கியமானது. தடுப்புக் காவலில் உள்ளவர்களை சந்திப்பதும் அவர் கள் குடும்பங்கள் அவர்களை கிரமமாக சென்று பார்வையிட உதவிகள் வழங்குவதும் நம் முன்னுரிமைகளாக அமையும்.

**நாட்டில் ஐ.சி.ஆர்.சி.யின் எதிர் கால பிரசன்னம் தொடர்பில் நீங்கள் எண்ணியிருப்பது என்ன?**

கவனமெடுத்து போதியளவு பணிகளை முடித்துக்கொள்வது தொடர்பில் முதலில் களத்தில் தொடர்ந்திருக்கும் மனிதாபிமான தேவைகள் பற்றியும் அது தொடர்பில் தேவைக்கேற்ப எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தெளிவினை நான் பெற்றுக் கொள்ள வேண்டியதாகவுள்ளேன். நீண்ட நோக்கில் சில பணிகள் அதாவது அங்கவீனமுற்றோர் தொடர்பிலான உதவிகள் மற்றும் கைதிகளை சென்று சந்தித்தல் போன்றவை தொடர்ந்தும் இடம்பெறவேண்டும் என்பதை நான் எதிர்பார்க்கிறேன். பின்னர் கூறப்பட்ட பணி, சிறைச்சாலைகளில் கட்டுமான பணிகள் தொடர்பில் அமையலாம். இவை அங்கு நாம் நடாத்தும் நம்பகத்தன்மையான அவதானிப்புக்கள் தொடர்பில் கைதிகளின் நிலைமைகள் அவர்களின் நடாத்துகை தொடர்பில் முன்னேற்றத்தைக் கொணர நாம் அதிகாரிகளுக்கு வழங்கும் ஒத்தாசைகளாக அமையும். (ஸ்ரீ-2)

## அரசாங்கத்திற்கு தேவையான சட்டங்கள் மட்டுமே பாராளுமன்றில் நிறைவேற்றம்

### சஜித் பிரேமதாச எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு தேவையான சட்டங்கள் மட்டுமே பாராளுமன்றில் நிறைவேற்றப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் சட்டங்களை நிறைவேற்றும் போது அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாகவும் குத்தகை விவசாயிகள் பிரச்சினை குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தத்தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

18 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்வதில் அரசாங்கம் காட்டிய முனைப்பு ஏனைய மக்கள் நலன்சார் சட்டங்களில் காட்டப்படுவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போதைய ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தனவின் தந்தை பிலிப் குணவர்தன குத்தகை விவசாயிகள் தொடர்பில் முதன் முதலில் பாராளுமன்றில் குரல் கொடுத்ததாக தெரிவித்த அவர் விவசாயிகளின் உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ)

## வெள்ளைக்கொடி விவகார வழக்கு

# வீடியோ குறுந்தகடுகளின் மூலப்பிரதியை மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

வெள்ளைக்கொடி விவகாரத்தில் சாட்சி பொருளாக முறைப்பாட்டாளர் தரப்பினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வீடியோ குறுந்தகடுகளின் மூலப்பிரதிகளை எதிர்வரும் 29 ஆம் திகதி மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர தெரண தொலைக்காட்சி நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

வெள்ளைக்கொடி விவகார வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்தில் சரத் பொன்சேகா இரத்தினபுரி பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை அடங்கிய குறுந்தகடு நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் பார்வையிடப்படவிருந்தது.

எனினும் முறைப்பாட்டாளர்கள் தரப்பில் வழங்கப்பட்டுள்ள குறுந்தகடுகளில் சரத் பொன்சேகா ஆற்றிய உரையின் ஒரு சில பகுதிகளே இருப்பதாகவும் அந்த உரையை முழுமையாக வெளியிடாமல் ஒரு சில பகுதிகளை வெளியிடுவது சாட்சிகள் கட்டளை சட்டத்தை மீறுவதாகும் என பொன்சேகாவின் சட்டத்தரணி நளின்லத்துவ ஹெட்டி நீதிமன்றத்தில் வாதிட்டதை அடுத்து நீதிபதி மேற்படி உத்தரவை பிறப்பித்தார். (ஸ்ரீ-2)

# அமைச்சுகளுக்கும் புதிய செயலாளர்கள்

புதிய அமைச்சுக்களுக்கான 55 செயலாளர்கள் அலரிமாளி கையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற வைபவமொன்றின் போது ஜனாதிபதியிடமிருந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண் டனர்.

அமைச்சரவையின் செயலாள ராக சுமித் அபேசிங்க நியமிக்கப்பட் டுள்ளதுடன் பிரதமரின் செயலாள ராக எஸ். அமரசேகர நியமிக்கப்பட் டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலா ளராக கோத்தபாய ராஜபக்ஷவும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சி னதும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினதும் செயலாளராக கலாநிதி பீ.பி ஜயசுந்தரவும் நியமிக் கப்பட்டுள்ளனர்.

ஊடக அமைச்சுக்குச் செயலா ளராக டபிள்யூ. பி.கனேகலவும் நீதி அமைச்சுக்குச் செயலாளராக சுகத கம்லத்தும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் நிஹால் ஜயதிலக உள் ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளராகவும் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன உயர் கல்வி அமைச்சின் செயலா ளராகவும் நியமனத்தைப் பெற்ற னர். (ச-5)

# பொதுமக்களின் பணத்தைப் பயன்படுத்தி ஆட்சியாளர்கள் துஷ்பிரயோகம்

## கருஜெயசூரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமெரிக்காவை விட சில வகை உணவுப் பொருட்களுக்கு இலங் கையில் விலை அதிகம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

மூன்று வேளை உணவை உட் கொள்ள முடியாது மக்கள் அவதியு றும் சந்தர்ப்பத்தில் பொது மக்கள் பணத்தைப் பயன்படுத்தி கோடிக் கணக்கில் செலவு செய்து பதவிப் பிரமாண நிகழ்வுகளை நடத்துவது ஏற் புடையதல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கி வரும் தருணத்தில் பொது மக்களின் பணத்தை ஆட்சி யாளர்கள் துஸ்பிரயோகம் செய்து வருவதாக தெரிவித்த அவர் நாட்டில் மக்கள் ஆட்சியொன்றை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டு மென குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலி பயங்கரவாதம் தொடர் பில் பிரசாரம் செய்து வந்த அரசாங்கம் தற்போது கோதுமை மா பயங்கரவாதம் குறித்து பிரசாரம் செய்து வருவதாக அவர் தெரிவித் துள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொ ழித்த சரத் பொன்சேகாவின் ஜன நாயக உரிமைகளை முடக்கும் திட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி இடமளிக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# இவ்வருடத்தில் எலிக்காய்ச்சலுக்கு 89 பேரும் டெங்கு காய்ச்சலுக்கு 230 பேரும் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரை காலப்பகுதியில் 3 ஆயிரத்து 810 பேர் எலிக்காய்ச்சல் தொற்றுக்குள் ளானதாகவும் அதில் 89 பேர் உயிரி ழந்ததாகவும் பதிவாகியுள்ளது.

கடந்த 10 மாத காலப் பகுதியில் ஒக்டோபர் மாதத்திலேயே அதிக எண் ணிக்கையானனோர் எலிக்காய்ச் சலினால் பீடிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு தெரிவிக்கிறது.

ஒக்டோபர் மாதத்தில் 604 பேர் இக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள் ளனர். இதேவேளை இந்த வருடத் தின் இதுவரை காலப் பகுதியில் 230 பேர் டெங்குக் காய்ச்சலினால் இறந் துள்ளதாக சுகாதார அமைச்சின் ஆய்வு கூறுகிறது.

இக்காலப் பகுதியில் டெங்குத் தொற்றுக்குள்ளானவர்களின் எண் ணிக்கை 32 ஆயிரத்து 956 பேரெனப் பதிவாகியுள்ளது. கடந்த ஒக்டோபரில் மாத்திரம் ஆயிரத்து 114 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளானதாக வும் சுகாதார அமைச்சின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த செப்டெம்பர் முதலாம் திகதி முதல் இதுவரை காலப் பகுதியில் நொ வெல் இன்ஃ புளூ வென்சா எனப்படும் ஏ எச் 1 என் 1 வைரஸ் தொற்றுக்குள்ளான 73 பேர் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. (ஶ்ரீ-2)



பரிசுத்த புதுமை மாதா இளைஞர் படைப்பாக்கல் இயக்கத்தின் ஏற்பாட்டில் மரித்த அனைத்து விசுவாசிகளினதும் இளைப்பாறு தலை வேண்டி பரிசுத்த புதுமை மாதா ஆலயத்தில் இரத்ததான நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் இளைஞர், யுவதிகள் உட்பட 23 குருதிக் கொடையாளர்கள் இரத்ததானம் வழங்கினர். இரத்ததானம் வழங்கும் இளைஞர்களை படத்தில் காணலாம்.

# சிரேஷ்ட அமைச்சுப் பதவிகள் அரசியல் சாசனத்துக்கு முரணானது

## ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

சிரேஸ்ட அமைச்சுப் பதவிகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியாதென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் அண்மையில் வழங்கப்பட்ட சிரேஷ்ட அமைச்சுப் பதவிகள் அரசி யல் சாசனத்திற்கு முரணானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் விஜயதாச ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் நிறைவேற்று அதிகாரத் தைப் பயன்படுத்தி ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இவ்வாறான நியமனங்களை வழங்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

பொதுமக்கள் பணத்தை செல விடும் அமைச்சர்களை கண்காணிப்பு செய்யும் பணி பாராளுமன்றிற்கு ஒப்படைக்கப்படட வேண்டியது அவசி யமானதெனவும் துரதிஷ்ட வசமாக இந்த அதிகாரங்களை நிறைவேற்று அதிகாரம் ஆக்கிரமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொது முயற்சியாண்மை (கோப்) மற்றும் பொது கணக்கீடு (பாக்) ஆகிய பாராளுமன்றக் குழுக்களுக்காக அமைச்சு பதவி வகிக்காதவர் களே நியமிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளப் பட்ட நடைமுறையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியா போன்ற நாடுகளில் முக்கியமான பாராளுமன்றத் தெரி வுக் குழுக்களின் தலைமைப் பொறுப்பு எதிர்க்கட்சியினருக்கு வழங்கப்படுவ தாக அவர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட தயாரிப்பின் போதும் எதிர்க்கட்சியின் காத்திரமான பங்களிப்பு வழங்கி வருவதாகவும் ஆளும் கட்சியின் சில யோசனைத் திட்டங்களை நிராகரிக்கக் கூடிய அதிகாரம் பாக் பாராளுமன்றக் குழு விற்கு காணப்படுவதாக அவர் தெரி வித்துள்ளார்.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜன நாயக ஆட்சி நடத்தி வரும் இலங்கை போன்ற நாடுகளில் முழு நேர நிதி அமைச்சர் ஒருவர் பாரா ளுமன்றில் பிரசன்னமாகி யிருக்க வேண் டியது அவசியமானதெனவும் குறிப் பாக வரவு செலவுத்திட்ட விவா தங்களின் போது நிதி அமைச்சரின் பிரசன்னம் மிகவும் விரும்பத் தக்க தென அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். கடந்த கால அரசாங்கங்களும் இதே தவறை இழைத் துள்ளதாகவும் சில ஜனாதி பதிகள் நிதி அமைச்சுப் பொறுப்பை இதற்கு முன்னரும் தமது கட்டுப்பாட்டில் வைத்தி ருந்ததாக அவர் தெரிவித்துள் ளார். (ஶ்ரீ-2)

# வத்தளையில் தமிழ் வர்த்தகரை காணவில்லையென முறைப்பாடு

(கொழும்பு)

வத்தளைப் பகுதியில் வர்த்தகர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக வத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் தலைமுடி வெட்டு வதற்காக சென்ற வர்த்தகர் ஒரு வரே காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வத்தளை அல்விஸ் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய கணபதி குணரத்தினம் என்பவரே காணா மல் போயுள்ளார். (ஶ்ரீ-2)




- 1778 - ஹவாயன் தீவுகளில் அமைந்துள்ள மௌவுய் தீவில் இறங்கிய முதல் ஐரோப்பியன் கப்டன் ஜேம்ஸ் குக்.
- 1842 - நோட்ரெ டேம் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1922 - எகிப்திய மன்னன் துட்டன்காமுன் என்பவனின் கல்லறைக்குள் ஹவாட் காா்ட்டர் மற்றும் கார்னாவன் பிரபு ஆகியோர் சென்றனர். 3ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் அதற்குள் சென்ற முதல் மனிதர்கள் இவர் களே.
- 1941 -பிரான்சிடமிருந்து லெபனான் ஒரு தலைப்பட்சமாக விடுதலையை பிரகட னப்படுத்தியது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஆறு யப்பானிய விமானங்கள் தொலைத் தொடர்புகள் அற்ற நிலையில் யப்பானின் இத்தோகபு குடாவிலி ருந்து பேர்ள் துறைமுகத்தை தாக்கி யழிக்கப் புறப்பட்டன.
- 1942 - நோர்வேயைச் சேர்ந்த 572 யூதர்கள் ஜெர்மனியர்களினால் போலந்தின் ஒஸ்விட்ச் நகரில் உள்ள யூத முகா முக்கு நாடு கடத்தப்பட்டனர். இவர் களில் 25 பேரே தப்பினர்.
- 1949- இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- 1950- மக்கள் சீனக் குடியரசின் படைகள் வடகொரியாவினுள் நுழைந்து தென் கொரியா மற்றும் அமெரிக்கப் படை கள் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1957 - சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளைத் தீயிடும் போராட்டத்தை தந்தை பெரியார் ஆரம்பித்து வைத்தார்.
- 1965 - சகாரா பாலைவனத்தில் பிரான்ஸ் ஆஸ்டெரிக்ஸ்-1 என்ற தனது முதலா வது செய்மதியை விண்ணுக்கு அனுப் பியது.
- 1983 - லண்டன் ஹீத்ரோ விமான நிலைய பொதிகள் பாதுகாப்பு அறையில் இருந்து £26 மில்லியன் பெறுமதி யான 6ஆயிரத்து 800 தங்கப் பாளங் கள் களவாடப்பட்டன.
- 2001 - நேபாளத்தில் மன்னர் கயனேந்திரா அவசரகாலச் சட்டத்தை பிறப்பித் தார்.
- 2002 - இந்தியாவின் நாகாலாந்து மாநிலத் தில் தனிநாடு கோரும் அமைப்புக் களின் மீதான தடை நீக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1936 - லலித் அத்துலத்முதலி, இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்
- 1939- அப்துல்லா அகமது படாவி, மலேசியப் பிரதமர்
- 1939- டீனா டர்னர், அமெரிக்க ராக் அன் ரோல் இசைக்கலைஞர்.
- 1948 - எலிசபெத் பிளாக்பர்ன், நோபல் பரிசு பெற்றவர்
- 1948 -வி.கே.பஞ்சமூர்த்தி, ஈழத்தின் நாதஸ்வரக் கலைஞர்

### இறப்புக்கள்

- 1930- சேர் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கையின் தேசியத் தலைவர்
- 2006- ஜி.வரலட்சுமி, தமிழ்த் திரைப்பட நடிகை

1954-தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்ததினம்



# கார்த்திகை மாத இராசிபலன்கள்

## 17.11.2010 முதல் 15.12.2010 வரை




**(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்)**

**குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.**

***வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வதே வளர்ச்சிக்கு வித்திடும் என்று சொல்லும் கும்ப இராசி நேயர்களே!***

நீங்கள் அன்பிற்கு அடிமையானவர்கள். அனுபவ அறிவு மிக்கவர்கள். உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். தேசப்பற்றும் உங்களிடம் இருக்கும். தெய்வப் பற்றும் உங்களிடம் இருக்கும்.

ஒரு காரியத்தை நிறைவேற்ற சண்டையோ, சமாதானமோ எது நன்மை தருமோ அதை ஆராய்ந்து தேர்ந்தெடுப்பீர்கள். நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் வளைந்து கொடுத்துப் போவதால் தான் வாழ்வில் வெற்றி கிடைக்கிறது.

இம் மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியிலேயே குரு சஞ்சரித்து ஜென்மக் குருவாக மாறுகிறார். எனவே, இடமாற்றம், ஊர் மாற்றங்களைத் தற்காலிகமாக ஒரு சிலருக்குக் கொடுக்கலாம். சில நாட்கள் மட்டுமே ஜென்மத்தில் இருப்பதால் அந்த மாற்றத்தை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை.

கடந்த 21 ஆம் திகதி மேல் குருவின் பூரண அருளுக்கு நீங்கள் பாத்திரமாகப் போகிறீர்கள். மீனத்தில் குரு சஞ்சரித்து, அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தப் போகின்றது. எனவே, எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்ய இயலும். இல்லத்தில் சுப காரியப் பேச்சுக்கள் முடிவடையும்.

4,9 க்கு அதிபதியான சுக்ரனும் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். தொழில் ஸ்தானத்தில் சூரியன்,புதன், செவ்வாய் கூடி கூட்டுக்கிரக யோகத்தை உருவாக்குகிறார்கள். எனவே, திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். திறமைமிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து வெற்றியைத் தேடிக் கொடுப்பர். தடைகள் விலக அனுமன் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு!**

இதுவரைகும்பத்திற்கும்,மீனத்திற்கும்மாறி, மாறிச் சென்ற குரு கடந்த 21 ஆம் திகதி தொடக்கம் மீன இராசியிலேயே தன் சொந்த வீட்டில் பலம் பெற்றுச் சஞ்சரிக்கிறார்.

அதன் பார்வை உங்கள் இராசிக்கு 6, 8,10 ஆகிய இடங்களில் பதிவதால் கடன் சுமைகள் குறையும். உத்தியோகம் சம்பந்தமாக ஊதிய உயர்வும் கிடைக்கவில்லையே, உத்தியோக உயர்வும் கிடைக்க வில்லையே என்று ஏங்கியவர்கள் இரண்டும் கிடைத்து மகிழ்ச்சி காணப்போகிறார்கள். மறைமுக எதிர்ப்புகள் மாறும் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரும்.

தொழில் ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் மூடிக்கிடந்த தொழிலை மீண்டும் திறக்க வாய்ப்புக் கிடைக்கும். முறையாக பங்குதாரர்கள் வந்திணைவர். அரசு வழியில் எதிர்பார்த்த உதவி கிடைத்து தொழிலை விரிவு செய்வீர்கள். அரசியல் வாதிகளால் ஆதாயம் கிடைக்கும். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் மாறும். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டாலும், அப்போ தைக்கு அப்போது நிவர்த்தி செய்து வருவீர் கள்.

**தனுசு செவ்வாயின் ஆதிக்கம்.**

உங்கள் இராசிக்கு 3,10க்கு அதிபதியான செவ்வாய் இலாப ஸ்தானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் சஞ்சரிக்கத் தொடங்குகிறார். இது நன்மை தான். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும்.

சொந்த, பந்தங்களின் ஒத்துழைப்போடு முன்னேற்றம் காண்பீர்கள். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதை முன்நின்று நடத்துவீர்கள். அரசியலில் இருப்பவர்களுக்கும் புதிய பொறுப்புகளும், பதவிளும் வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகவும், வளர்ச்சி கூடவும் முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதத் தொடக்கத்தில் ஜென்ம குருவின் ஆதிக்கம் இருப்பதால், குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். குழந்தைகள் நலன்கருதி பெரும் தொகை ஒன்றைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

மீன குருவின் சஞ்சாரத்திற்குப் பிறகு பக்கத்து வீட்டாரின் பகை மாறும். படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

மாதக்கடைசியில் உங்கள் பெயரில் இடம், பூமி வாங்குவதற்கான அறிகுறிகள் தோன்றும். பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.




**(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**

**தடைகள் விலகும் நேரம்!**

***ஒரு முறை பேசியதையே ஒவ்வொரு நாளும் நினைத்துக் கொண்டிருக்க வைக்கும் மீன இராசி நேயர்களே!***

நீங்கள் கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். உங்கள் வேலைகளை எல்லாம் விரைவாக செய்து முடிப்பீர்கள். குருவின் ஆதிக்கத்திற்குரிய இராசியில் பிறந்ததால் மற்றவர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுபவர்களாகவும் துதிக்கப்படுபவர்களாகவும் நீங்கள் விளங்குவீர்கள்.

இம் மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது , மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கிறார். அதன் பிறகு ஜென்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். மற்ற இராசிக்காரர்களுக்கு ஜென்மகுரு திடீர் மாற்றங்களைக் கொடுக்கும். ஆனால், எங்களைப் பொறுத்தவரை இராசிநாதனாக குரு அமைவதால் அது இராசியிலேயே சஞ்சரித்துப் பலம் பெறும் பொழுது உடல் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். உள்ளத்தில் உற்சாகத்தோடு பணிபுரியும் வாய்ப்பை யும் வழங்கும்.

சுக்ர பலம் கூடுவதால் பெண் வழிப்பிரச்சினைகள் தலை தூக்கலாம். குடும்பத்தில் இனம் புரியாத கவலையும் உறவினர் பகையும் உருவாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. எனவே விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

சனியின் பார்வை சப்தம பார்வையாக உங்கள் இராசியில் பதிவதால் வாகனங்களில் செல்லும் போது கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் அமைப்பு ஒரு சிலருக்கு கிடைக்கும். சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள் சஞ்சலங்கள் தீரும். ஜென்ம குருவால் சிறப்பான பலன் பெறச் செந்தூர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு**

இதுவரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் கடந்த 21 ஆம் திகதி தனது சொந்த வீடான மீனத்தில் அதாவது உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லத்தில் சுபகாரிய பேச்சுகள் இனிதே முடிவாகும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். தேங்கிக் கிடந்த காரியங்கள் திறமை மிக் கவர்களின் ஒத்துழைப்போடு இனித் துரிதமாக நடைபெறும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்க வள்ளல்களின் ஒத் துழைப்பு கிடைக்கும்.

குருவின் பார்வை5,7,9 ஆகிய இடங்களில் பதிவதால் பிள்ளைகளின் வழியே ஏற்பட்ட பிரச்சினைகள் மாறும். அவர்கள் கல்வி விருத்தியும் முன்னேற்றமும் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். சப்தம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் வாயில் தேடி வந்த வரன்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து முடித்துக் கொள்வீர்கள். தந்தை வழித் தகராறுகள் அகலும். பெற்றோர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து உதவிசெய்வர்.

**தனுசு– செவ்வாயின் ஆதிக்கம்**

2,9 க்கு அதிபதியான செவ்வாய் எதிர் வரும் 28 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். எனவே தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை வந்து கொண்டே இருக்கும். எதிர்பாராத திருப்பங்கள் பலவற்றையும் சந்திப்பீர்கள். சகோதர

சிவல்புரி சிங்காரம்

வழிச் சச்சரவுகள் அகலும். உடன்பிறப்புகள் உங்கள் தொழிலுக்கு பங்குதாரர்களாக வந்திணைவர். பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியால் ஏற்படும் தடைகள் அகல, சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாத தொடக்கத்தில் குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். கூட இருப்பவர்களை அனுசரித்து செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு மாற்று வைத்தியத்தால் உடல்நிலை சீராகும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த புதுமுயற்சி 'வெற்றி தரும். பயணங்கள் அதிகரிக்கும். உறவினர் பகை மாறும். மாதக்கடைசியில் வருமானம் திருப்தி தரும். குரு வழிபாடு குதூகலம் தரும். (முற்றும்)

**அன்பு வாசகர்களே!**

**உங்கள் வலம்புரியில் கார்த்திகை மாத இராசி பலன்கள் நிறைவடைந்துள்ளதால் நாளை தொடக்கம் பிறந்த திகதிப் பலன் கள் வெளிவரும்.**








பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் 49 ஆவது ஆண்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் , தலைவர் கே.பி. ஆனந்தநடேசன் தலைமையில் வரவேற்கப்படுவதையும் மன்றச் செயலாளரும் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியருமான பா. றகுவரன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அதிபர் திருமதி. எஸ். சுந்தரேசன் நிற்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இளைப்பாறிய அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - வரலாறு

## பகுதி - I

## 1 மணித்தியாலம்

(நேற்றைய தொடர்ச்சி)

21) முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் இல்லை.
(1) C (2) B (3) A (4) D

22) இரண்டாவதற்குக் காட்டப்பட்டுள்ள நிகழ்வு முதலாவதில் முனைப்பாகத் தெரியும் இயல்பாகும்.
(1) D (2) C (3) A (4) B

23) கீழே தரப்பட்டுள்ளவை துருக்கிய முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கு மிடையே ஏற்பட்ட சிலுவைப் போரின் சில இயல்புகளாகும், பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
(1) போருக்குச் சென்ற சகல கிறிஸ்தவ போர் வீரர்களும் சிலுவையை அணிந்திருந்ததால் இது சிலுவை யுத்தம் எனப் பெயர் பெற்றது.
(2) கி.பி. 1453ல் கொன்ஸ்தாந்துநோபிள் நகரம் உரோமானியர்களினால் கைப்பற்றப்பட்டமை.
(3) ஐரோப்பாவின் வியாபார நடவடிக்கைகள் சிலுவை யுத்தம் மூலம் புத்துயிர் பெற்றமை.
(4) ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ பக்தர்களுக்கு ஜெருசலேத்துக்கு சென்று வழிபட துருக்கிய முஸ்லிம்கள் அனுமதியளித்தமை.

24) "அமெரிக்கர்கள் தமது அதிகாரங்களைப் பரப்பும் போது ஆயுதங்களைப் பயன்படுத்தி மிகவும் குரூரமாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் நடந்து கொண்டனர்" இக்கூற்றுடன் மிகவும் தொடர்புடைய விடை,
(1) பிரான்சியர்களுடன் (2) ஒல்லாந்தருடன்
(3) போர்த்துக்கேயருடன் (4) ஸ்பானியர்களுடன்

25) ♦ இவர் ரிப்பன் கல்லூரியை ஆரம்பித்த பெரியாராக வரலாற்றில் இடம்பிடித்தார்.
♦ இந்திய தேசிய காங்கிரஸின் தந்தை என இந்தியர்களினால் போற்றப்படுகின்றார்.
♦ பெங்காலி பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
♦ இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக இரு தடவைகள் தெரிவு செய்யப்பட்டார்.

மேற்கூறிய தகவல்களை உள்ளடக்கியதாக இந்திய தேசபிதா ஒருவரது சலுகையை நீர் எழுதுவீரானால் அதற்கு எவ்வாறு தலைப்பிடுவீர்?
(1) மகாத்மாகாந்தியின் வரலாற்றுக் கதை
(2) சிறி ஜவகர்லால் நேருவின் வரலாற்றுக் கதை
(3) சுரேந்திரனாத் பானார்ஜியின் வரலாற்றுக் கதை
(4) கோபாலகிருஷ்ண கோகிலேயின் வரலாற்றுக் கதை

26) "கி.பி. 1857 புரட்சியின் பிரதான பெறுபேறானது. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சி முடிவடைந்து இந்நாடு பிரித்தானிய முடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டமையாகும்" இக்கூற்றை வாசிக்கும் போது உமக்கு நினைவில் வரும் நாடு.
(1) சிறிலங்கா (2) இந்தியா
(3) யப்பான் (4) பாகிஸ்தான்

27) கீழே நிரல்Aயை நிரல் Bயுடன் இணைக்கும் போது வரும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் 'A' | நிரல் 'B' |
|---|---|
| 1.இடக்கி சாமுராய் | A-கி.பி.1583இல் யுத்தகளத்தில் இறந்தான். |
| 2.டொகுகாவா இயடி | B- யப்பானின் முதலாவது அரசியல் கட்சியான லிபரல் கட்சியை உருவாக்கியமை. |
| 3.நொபுனகா | C- யப்பானிய வரலாற்றில் மிகவும் உயர்ந்த மனிதராகப் போற்றப்படுகின்றார். |
| 4.ஹிதெயொசி | D- கி.பி.1603இல் யப்பானின் ஆட்சியாளரானார். |
| | E- யப்பானை பிரித்தானியருக்குக் காட்டிக்கொடுக்க உதவியமை |

(1) BDAC (2) DECA (3) BDAE (4) CAEB

28) மாணவர்களான நீங்கள் யப்பானைப் பற்றி கட்டுரை எழுதும்போது அதில் சேர்த்து கொள்ள முடியாத வாக்கியத்தைத் தெரிவு செய்க.
(1) கிழக்காசியாவில் மோட்டார் வாகனங்களுக்கு புகழ்பெற்ற நாடாகும்
(2) சுறுசுறுப்பு/அர்ப்பணிப்பு யப்பானியர்களின் முன்னேற்றத்தின் இரகசியமாகும்.
(3) மேலைத்தேய நாடுகளுடன் தொடர்புகளை வைத்திராத நாடாகும்
(4) தமது சமயத்தினை உயர்வாக மதித்து பண்டைய விரோத செயல்களை மன்னித்த இனமாகும்.

29) உலகில் "புரட்சி" பற்றி பல்வேறு கருத்துக்கள் உண்டு " புரட்சி என்பது மக்களை இரவு விருந்தொன்றுக்கு அமைப்பதற்கு ஒப்பான செயலன்று" இவ்வாறு கூறி தமது நாட்டு மக்களுக்கு புரட்சி செய்யுமாறு அழைப்பு விடுத்த தலைவர்,
(1) வி.ஐ. லெனின் புரட்சியாளரினால்.
(2) அடோல்ப் ஹிட்லர் என்ற நாசிச வாதியினால்.
(3) முசோலினி என்ற பாசிச வாதியினால்.
(4) மா ஓ சேதுங் என்ற கொமியுனிஸ வாதியினால்.

30) ஆஸ்திரிய இளவசரன் ஆரச். டியூக்,பிரான்ஸ் பேர்டினனும் அவரது மனைவியும் கி.பி.1914 ஜூன் 28ஆம் திகதி சேர்பியாவில் சரஜீவோ நகரில் வைத்து சேர்பிய வீரன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்நிகழ்வு பின்வரும் யுத்தங்களுள் எதற்கு உடனடிக்காரணமைந்தது?
(1) 2ஆம் உலக மகா யுத்தம் (2) மத்திய கிழக்கு யுத்தம்
(3) 1ஆம் உலக மகா யுத்தம் (4) சிலுவை யுத்தம்

31) கீழே தரப்பட்டுள்ள நிகழ்வுகளின் சரியான வரலாற்று ஒழுங்கினை உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.
A- ஹவாய் தீவில் பேர்ள் துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஐ.அமெரிக்காவின் கடற்படைத்தளம் மீது யப்பான் குண்டுவீசித் தாக்கியமை
B-அடொல்ப் ஹிட்லரினால் போலந்து ஆக்கிரமிக்கப்பட்டதுடன் 2ஆம் உலக மகாயுத்தம் ஆரம்பமாகியவை.
C-அமெரிக்காவினால் ஹிரோசிமா மீது அணுகுண்டு போடப்பட்டதால் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டோர் இறந்ததுடன் அதிகமானோர் அங்கவீனர்களாயினர்.
D-அமெரிக்கப் பிரயாணிகளை ஏற்றிச் சென்ற லுசிதானியா கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை.
(1) DBCA (2) DBAC (3) BACD (4) DABC

32) கீழே தரப்பட்டுள்ள ஐ.நாடுகளின் பிரதான அமைப்புக்களுள் தற்போது தொழிற்படாதுள்ள அமைப்பு எது?
(1) செயலகம் (2) பாதுகாப்புச் சபை
(3) நம்பிக்கை பொறுப்பு சபை (4)சர்வதேச நீதிமன்றம்

33) பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற ஐ.அமெரிக்க நாடுகள் ஒருங்கிணைக்கப்படும் போது தமது ஆட்சிமுறையை எவ்வாறு அமைத்துக்கொண்டனர்.
(1) பிரித்தானிய பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு ஏற்ப
(2) மன்னராட்சி முறையொன்று
(3) நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ ஆட்சிமுறை
(4) சமஷ்டியாட்சி முறையொன்று

34) நிரல் Aக்கு ஏற்ப நிரல் Bயை ஒழுங்கமைக்கும் போது வரும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் 'A' | நிரல் 'B' |
|---|---|
| 1. மொன்ரோ பிரகடனம் | A-தோல்வியடைந்த கட்சியினருக்கு கௌரவத்தை பெற்றுக்கொடுத்தல் |
| 2. சர்வ சாதாரண உணவு அறிக்கை | B- பிராங்க்ளின் ரூஸ் வெல்ட் |
| 3.திறந்த வாயில் கொள்கை | C- வெளிநாட்டு விவகாரங்களில் தலையிடாமை |
| 4.. பல்பேர்ட் பிரகடனம் | D- இஸ்ரேல் தோற்றுவிக்கப்படல் |
| | E- இராஜாங்க செயலாளர் ஜோன்லோ |

(1) CAED (2)CBEA (3)EBCA (4) CDEA

35) "கூட்டுப்பொறுப்பு என்ற அத்திவாரத்தின் மேல் அமைச்சரவை தங்கியுள்ளது" இக்கூற்றின்படி அமைச்சரவை அமைச்சர் ஒருவரால் செய்ய முடியாத விடயத்தை உள்ளடக்கிய கூற்றைத் தெரிவு செய்க.
(1) சட்டவாக்க மசோதா தொடர்பாக பாராளுமன்றத்தில் விமர்சனங்களை முன்வைத்தல்.
(2) அமைச்சரவைத் தீர்மானங்களின் பின் எடுக்கப்படும் முடிவுகள் பற்றி பொறுப்புக்கூறுதல்.
(3) அமைச்சரவைத் தீர்மானங்களை ஏற்க விரும்பாத சந்தர்ப்பங்களில் இராஜினாமாச் செய்தல்.
(4) அமைச்சரவைத் தீர்மானங்களை பகிரங்கமாக விமர்சனம் செய்தல்.

36) நிரல் Aயில் தரப்பட்டுள்ள தலைவர்களுடன் தொடர்புடைய நாடுகளை நிரல் Bயில் இருந்து பொருத்தும் போது வரும் சரியான விடை.

| நிரல் 'A' | நிரல் 'B' |
|---|---|
| 1.ஹோச்சிமிங் | A-இஸ்ரேல் |
| 2. பட்றிஸ் லுமும்பா | B- ரஷ்யா |
| 3. அப்துல் கமால் நாசர் | C- பெல்ஜியம் கொங்கோ |
| 4. யெல்ட் சிங் | D- வியட்நாம் |
| | E- எகிப்து |

(1) BCDE (2)ACDB (3)DCEB (4) ECDA

37) இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ ஆட்சி முறையை அறிமுகம் செய்த யாப்பு முறைச் சீர்திருத்தம்,
(1) டொனமூர் (2) 1ஆம் குடியரசு யாப்பு
(3) சோல்பரி யாப்பு (4) 2ஆம் குடியரசு யாப்பு

38) 1972 குடியரசு யாப்பின் இயல்புகளை மட்டுமே உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
A-தேசிய அரச பேரவையை அறிமுகம் செய்தமை.
B-விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அறிமுகம் செய்தமை.
C-அபிப்பிராய வாக்கெடுப்பு முறையை அறிமுகம் செய்தமை.
D-சம்பிரதாய அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவியை அறிமுகம் செய்தமை.
(1) AC (2) AD (3) BC (4) DB

39) சோவியத் ரஷ்யாவின் வழிகாட்டலில் சமவுடமை அணியில் இணைந்த நாடுகளை மட்டுமே உள்ளடக்கியுள்ள விடை,
(1) மேற்கு ஜேர்மனி, போலந்து,செக்கோஸ்லாவாக்கியா
(2) கிழக்கு ஜேர்மனி, ஹங்கேரி, போலந்து
(3) போர்த்துக்கல், இத்தாலி,நெதர்லாந்து
(4) செக்கோஸ்லாவாக்கியா, கிரேக்கம், போலந்து

40) அணிசேரா நாடுகளின் கூட்டமைப்புக்கு பஞ்சசீலக் கொள்கையை முன்மொழிந்த நாட்டுத் தலைவர் யார்?
(1) திருமதி.சிறிமாவோ ஆர்.டீ.பண்டாரநாயக்கா
(2) திரு.மார்ஷல் டிட்டோ
(3) திரு.அப்துல் கமால் நாசர்
(4) திரு. ஜவகர்லால் நேரு

(தொடரும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பிளாஸ்ரிக்கிலுள்ள நச்சுப்பதார்த்தங்களும், அவற்றின் தாக்கங்களும்

பிளாஸ்ரிக் என்பது பல சிறிய அலகு கள் பங்கீட்டு வலுப் பிணைப்பினால் இணைக்கப்படுவதால் உருவாக்கப்படுகின்ற ஒரு பல்பகுதியாகும். பொதுவாக, பல்பகுதியங்களை செயற்கையான பல்பகுதியம், இயற்கையான பல்பகுதியம் என வகைப்படுத்தலாம். பிளாஸ்ரிக்குகள் செயற்கை பல்பகுதியங்களாகும். பிளாஸ்ரிக்குகளின் உற்பத்தியில் மூலப்பொருளாக பெற்றோலியமே பயன்படுத்தப்படுகின்றது. செயற்கை பல்பகுதியங்களின் உருவாக்கத்தின் போதும், பயன்பாட்டின் பின் அவற்றை கழிவாக அகற்றும்போதும், மாசடைவதால் மனிதன் பல பாதகமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில் பல செயற்கையான பல்பகுதியங்கள் (உதாரணமாக பிளாஸ்ரிக்குகள்) பிரிகையாக்கிகளினாலோ அல்லது சூழல்காரணிகளாலோ பிரிகையடைவது இல்லை.

பிளாஸ்ரிக்குகளினை அவற்றின் இயல்புகளுக்கும் இரசாயனக் கட்டமைப்புகளுக்கும் ஏற்ப வகைப்படுத்தலாம். உதாரணமாக, குறைந்த அடர்த்தியுள்ள பொலிஎதிலீன் (Low Density Polyethylene) உலர்ந்த அடர்த்தி யுள்ள பொலிஎதிலீன் (High Density Polyethylene) பொலிவைனல் குளோரைட் (Polyvinyl Chloride) , பொலிஸ்ரைற்றின் (Polystyrene), பொலிபுளொப்பைலின் (Polypropylene), பொலி எதிலீன் ரெறிவ்தலேற் (Polyethylene terephthalale), பொலி காபனேற்றுகள் (Polycarbonates).




படம் - 01

இவ்வகையான பிளாஸ்ரிக்குகளின் உற்பத்தியின்போது பல இரசாயனச் சேர்வைகள், நிறமாக்கிகள் பாரஉலோகங்கள் போன்றன பிளாஸ்ரிக்கின் உறுதியையும் பாவனையையும் அதிகரிக்க சேர்க்கப்படுகின்றது.

உதாரணமாக பிஸ்பீனோல் A (Bisphenol A) எனும் ஒரு இரசாயன சேர்வையை பொலி காபனேற்றுக்களினதும் இபொக்சி றிசினினதும் (epoxyresin) உற்பத்தியின் போது உபயோகிப்பதால், அவற்றின் உறுதித் தன்மை அதிகரிக்கின்றது. இவ்வகையான பிளாஸ்ரிக்குகள், தண்ணீர் போத்தல்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் (Toys) ,சம்புப் போத்தல்கள் (Shampoo bottles) , குழந்தைகளுக்கான உணவுஊட்டுவதற்கான போத்தல்கள் (Feading bottles) , பழச்சாற்றுப் போத்தல்கள் போன்றவற்றின் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன.



பிஸ்பீனோல் மூலக்கூறுகளுக்கிடையிலான இரசாயனப் பிணைப்பானது உறுதித் தன்மையற்றதாகையால் வெப்பம், அமிலம், காரம் போன்ற நிபந்தனைகளின் கீழ் இவ் இரசாயனப் பதார்த்தம் உணவுப் பதார்த்தங்களுடன் இலகுவாகக் கலந்துவிடுகின்றது. இவ்வாறு மாசடைந்த உணவை மனிதன் உள்ளெடுக்கும்போது பரம்பரையலகில் மாற்றங்கள் ஏற்பட்டு விகாரம், மார்பகப் புற்றுநோய் , ஆண் இனப் பெருக்கத் தொகுதியில் புற்றுநோய் (Prostate Cancer), உடற்பருமன் அதிகரித்தல் (Obesity), நீரிழிவு நோய்,மூளைப் பாதிப்பு, நிர்ப்பீடனத் தொகுதியில் மாற்றங்கள், விந்து உற்பத்தியில் வீழ்ச்சி, பருவமடையும் காலத்திற்கு முன்னதான பூப்பெய்தல் போன்ற விபரீத விளைவுகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. மேலும் இவ் இரசாயனப் பொருள் இலகுவில் பிரிகையடையாததாகையால், நீர் நிலைகளிலுள்ள உயிரினங்களால் உள்ளெடுக்கப்பட்டு, உணவு வலையினூடாக மனிதனில் செறிவாக்கப்படக்கூடியது.

மேற்கண்ட ஆய்வுகளின் படி அண்மையில் மிகக்குறைந்த அளவிலான பிஸ்பீனோலானது அடிபோனக்ரின்(Adiponectin) எனும் பதார்த்தம் கொழுப்பிழையத்திலிருந்து விடுவிக்கப்படுவதைக் குறைக்கின்றது. அடிபோனக்ரின் ஆனது இன்சுலினின் உணர்திறனை அதிகரிக்கச் செய்வதுடன், குளுக்கோசின் அனுசேபத்தையும் சீராக்குகின்றது. சிறுநீரில் பிஸ்பீனோலின் அளவு அதிகரிப்பது இருதயநோய் அதிகரிப்பதற்குக் காரணமாக உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

பிஸ்பீனோலானது இனப்பெருக்கத் தொகுதியின் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும். ஈஸ்ரோஜன்(estrogen) ஓமோனின் தொழிற்பாட்டைத் தாமதப்படுத்துகின்றது.

குழந்தைகள் விரும்பும் மென்மையான விளையாட்டுப் பொருட்களின் தயாரிப்பில் பொலிவைனயில் குளோரைட்டு பயன்படுத்தப்படுகின்றது. பொலிவைனயில் குளோரைட்டில் உள்ள தலேற்று எனும் சேர்வை யானது இவ்விளையாட்டு பொருட்களை குழந்தைகள் உமிழும் போது உடலினுள் செல்லக் கூடிய தன்மை கொண்டது.



இது உடலில் காணப்படும் ஓமோன்களை போன்று உடலின் இயக்கதைக் கட்டுப்படுத்துகின்றது. காபனேற்றப்பட்ட பானங்கள் , கொழுப்புணவு போன்றவை இவ்வகையான பிளாஸ்ரிக் கொள்கலன்களில் சேகரிக்கும் போதும், பிளாஸ்ரிக் உறைகளில் பொதி செய்யும் போதும் தலேற்றுக்கள் உணவுடன் கலந்து விடுகின்றன.

அத்துடன், கொழுப்புணவுகள் தலேற்றுகள் அதிகளவில் உடலினுள் செல்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தலேற்றுகள் தாய்ப்பாலின் ஊடாக குழந்தைகளின் உடலினுள் செல்வதால் ஓமோன் LH இனளவு அதிகரிப்பு, தெஸ்தெஸ்தரோனின் அளவில் குறைவு, குளோபியூலின் அளவில் அதிகரிப்பு போன்ற விளைவுகள் ஏற்படுவதாக பரிசோதனைகளின் வாயிலாக நிரூக்கப்பட்டுள்ளது.

பொலிவைனல் குளோரைட் பிளாஸ்ரிக்குகளில் காணப்படும் கட்மியம் (cd), ஈயம் (pb) போன்ற பார உலோகங்கள் சூழலை மாசுபடுத்துகின்றன.

பொலிவைனல் குளோரைட்டிலான கட்டடப்பொருட்கள், நீர்க்குழாய்கள் போன்றவை தகனத்தின்போது இரு ஒக்சின் (Dioxin) எனும் இரசாயனப் பதார்த்தத்தை சூழலுக்கு வெளியேற்றுகின்றன. ஆய்வுகள் மூலம் இவ்விரசாயன பதார்த்தமானது ஆழ்கடலில் உள்ள சுறா, திமிங்கலம் போன்றவற்றின் இழையங்கள், துருவகரடிகள், மற்றும் மனிதர்களின் உடலில் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இரு ஒக்சின் மிகக்குறைந்த செறிவிலும் நிர்ப்பீடன தொகுதி, அகஞ்சுரக்கும் தொகுதி, இனப்பெருக்கத் தொகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தகக்கூடியது.

மேலும் பொலிவைனல் குளோரைட்டின் தகனத்தின்போது வெளியேறும் ஐதரோ குளோரிக்கமிலமும் சூழல் மாசடைத லில் முக்கிய பங்கு வகிக்கிறது ஏனெனில், பொலிவைனல் குளோரைட் அதிகளவில் குளோரினைக் கொண்ட பல்பகுதியமாகும்.

பொலிஸ்ரைரின்(polystyrene) வகை பிளாஸ்ரிக் ஆனது பென்சினையும், ஸ்ரைரினையும் கொண்ட ஒரு பல்பகுதியமாகையால் இவற்றின் மூலம் புற்றுநோய் ஏற்படுகின்றது.

பொலிஎதிலீன் ரெறின் தலேற்று வகை பிளாஸ்ரிக்கில் உள்ள தலேற்றுகள் அந்திமனி(sb) போன்ற இரசாயன சேர்வைகள், வெப்பநிலை அதிகரிக்கும் போது, உணவுடன் (வினாகிரி, குளிர்பானம்) சேரும் அளவு அதிகரிக்கின்றது.

பொலியுறிதேன்(Polyurethane) இனாலான தளபாடங்களில் உள்ள (சொகுசு கதிரைகள், மெத்தை, கம்பளங்கள்) Poly brominocted diphenyl ethers ( PBDEs) மூளையின் விருத்தியைக் பாதிப்படைய செய்வதுடன் சுவாச நோய்க் காரணியாகவும் காணப்படுகின்றது. Teflon இனாலான இனிப்பு வகைகளை சுற்றி இருக்கும் உறைகள் உணவு, உணவு கொள்கலன்கள் போன்றவற்றிலிருந்து perfluoroocfanonic acid குருதியை அடைந்து புற்றுநோயை ஏற்படுத்துகின்றது.

அதேபோன்று Urea formaldehyde ஆனது தொண்டை வீக்கம், இருமல், தலையிடி, சோர்வு போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான தாக்கங்களில் இருந்து மனிதனைப் பாதுகாக்கும் பொருட்டு, பாதகமற்ற புதிய வகை பிளாஸ்ரிக்குகளை அறிமுகம் செய்வது காலத்தின் தேவையாகும். அவை குறுகிய காலத்தினுள் பிரிகையடைந்து காபனீரொட்சைட்டினையும் நீரையும் விளைவாகத் தரக் கூடியவையாக இருக்க வேண்டும்.

உதாரணமாக Poly lactide, Poly glycollide, Poly hydroxy butyrate, Biomax போன்றவற்றாலான பொருட்களைப் பயன்படுத்துதல் மனிதனுக்கும், சூழலுக்கும் பாதுகாப்பானது.


**றீகா தங்கராசா,**
செய்முறை காட்டுனர்,
இரசாயனவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


## வாரத்திற்கு ஒரு புதிர்! 32

$$\sqrt{1+\sqrt{1+\sqrt{1+\sqrt{1+\cdots}}}}$$

இன் பெறுமதியைக் காண்க?

விடைகளை 06.12.2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 31க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

தங்கராஜா அமிர்தவாசினி
No:3, சிவன்கோவில் வீதி,
சாவகச்சேரி.

**புதிர் 31 இற்கான விடை:** 79 அல்லது 81 79 49

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 32

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
தொ.பே. இல :..........................................
கையொப்பம் :..........................................

# அமரர் முருகேசனார்

# நூற்றாண்டு ஜனன தினம்



பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுகின்ற "தேவரையாளி சமூகம்" என்ற சொற்பதம், இன்றைய தேவரையாளி இந்துக்கல்லூரியை மையமாகக் கொண்ட சமூகத்தைக் குறிப்பதாகும்.

இச் சமூகத்தைச் சேர்ந்த பலருக்குத் தனித்துவமான வரலாறுகள் உண்டு. அந்தவகையில் அமரர் கந்தப்பு முருகேசு (க.மு) அவர்களும் ஒருவராகக் கணிக்கப்படுகின்றார்.

தேவரையாளி சைவ வித்தியாசாலையில் (இன்றைய தேவரையாளி இந்துக் கல்லூரி) ஆசிரியராக இருந்து பின்னர் புத்தூர் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம், அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை என்பவற்றில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர் தான் க.மு. அவர்கள்.

இவரது வாழ்வு ஆசிரியர் சேவை, அதிபர் சேவை என்பவற்றுடன் நிறைவு பெற்ற விடயமல்ல. அதற்கு மேலாக சமயம், கலை, கல்வி, சமூகம், அரசியல் எனப் பல்வேறு முகங்களில் ஆய்வுசெய்யப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

1910ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி வடமராட்சியில் பிறந்த க.மு. அவர்கள் தொண்ணூற்றைந்து வருடங்கள் வாழ்ந்து 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி இறைபதம் அடைந்தார். வாழ்ந்த காலத்தில் முற்காலப் பகுதியை அல்வாயிலும் பின் அரைப் பகுதியை புத்தூரிலும் இருப்பிடமாக்கிக் கொண்டவர்.

ஆன்மீக வாழ்வில் மிகுந்த ஈடுபாடுடைய க.மு அவர்கள் அல்வாய் அரசடி விநாயகர் ஆலயத்திற்கு (குருக்கட்டு) நிர்வாகக் கட்டமைப்பு வேண்டுமென நினைத்து 1940ஆம் ஆண்டு பரிபாலன சபையை ஸ்தாபித்து அதன் செயலாளர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதுடன் ஆலயத்திற்கென ஒரு யாப்பினையும் உருவாக்கினார். அதுமட்டுமன்றி தனது ஊரில் உள்ள அல்வாய்குச்சம் ஞானவைரவர் ஆலயத்தில் வேள்வி என்ற முறையில் நடை பெற்று வந்த மிருகபலியிடலை நிறுத்தி அதனை ஆடிப்பூர பொங்கல் விழாவாக மாற்றி அமைத்தார். அத்துடன் புத்தூர் மணற்பகுதி புவனேஸ்வரி அம்மன் ஆலய வளர்ச்சியிலும் இவரது பங்கு காத்திரமானது.

தனது ஆசிரிய வாழ்வில் கலைத்துறையில் மிகுந்த ஈடுபாடுடைய க.மு அவர்கள் இன்று ஈழத்தில் புகழ் பூத்த நட்சத்திரமாகக் கருதப்படும் அமரர் நடிகமணி V.V. வைரமுத்து அவர்களின் வளர்ப்புத் தந்தை மட்டுமல்லாது தனது நெறியாள்கையில் உருவான "மதிவதனா சத்தியசீலன்" என்ற நாடகத்தில் வைரமுத்து அவரை முதன்முதலில் நடிக்க வைத்து கலைத்துறையில் காலெடுத்து வைப்பதற்குக் களம் அமைத்துக் கொடுத்தவருமாவார். இதுமட்டுமல்லாது க.முஅவர்கள் புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலத்தில் சகுந்தலை, மார்க்கண்டேயர் போன்ற பரிசுபெற்ற நாடகங்கள் அமரரின் கலைத்துறைக்கு மேலும் எடுத்துக் காட்டாகும்.

கிறிஸ்தவ சமயிகளுக்கும், சாதிமான்களுக்கும் எதிராக 1917ஆம் ஆண்டு தேவரையாளி சைவ வித்தியாசாலை தோற்றம் பெறுவதற்கு முன்னர் 1914ஆம் ஆண்டு திண்ணைப் பள்ளிக் கூடமாக இயங்கி வந்தது. இத்திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியராக க.மு அவர்களின் தந்தை "அமரர் கந்தப்பு" அவர்கள் பணியாற்றியிருந்தார்.

பின்னர் தந்தை வழி வந்த மைந்தனாக, தேவரையாளி சைவ வித்தியாசாலையில் ஆசிரிய மாணவராக பணியாற்றிய க.மு அவர்கள், ஆசிரிய பயிற்சி பெறுவதற்காக 1929ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்படுகின்றார்.

நேர்முகப் பரீட்சையில் "சமஆசன சம போசனத்திற்குத்" தயாரா? என்ற வினா கேட்கப்பட்ட போது, பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட எண்பது மாணவர்களுள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த க.மு உட்பட மூவரும் சம்மதம் தெரிவிக்க ஏனைய மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக "சம ஆசன சமபோசனம்" போராட்டம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வலுப்பெற்ற போதும் சேர். பொன் இராமநாதன், கோப்பாய் சாமிநாதன் போன்றவர்களின் முயற்சியால் அக்கருத்து முறியடிக்கப்படுகிறது. இதனை ஏற்க மறுத்த க.மு அவர்கள் கலாசாலையிலிருந்து விலகித் தெல்லிப்பழை கிறிஸ்தவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குப் பயிற்சி பெறச் செல்கிறார்.

க.மு அவர்களின் இச் செயற்பாட்டினால் சம ஆசன சமபோசனச் சட்டம் 1930ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

ஆசிரியர் பயிற்சியை முடித்து தேவரையாளி சைவ வித்தியாசாலையில் ஆசிரியப் பணியை ஏற்றுக்கொண்ட க.மு அவர்கள் கலாசாலையில் நூலகத்தின் முக்கியத்துவத்தினை உணர்ந்தவர் என்ற வகையில் 1932ஆம் ஆண்டு தனது ஊரில் "கணபதி படிப்பகம்" என்ற பெயரில் ஒரு நிலையத்தை நிறுவி எல்லோரும் பத்திரிகை வாசிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தார். இதுவே 1936ஆம் ஆண்டு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் என்றும், இன்று வட அல்வை இளங்கோ சனசமூக நிலையமாக நிமிர்ந்து நிற்கிறது.

தனது ஊரில் இருந்து தேவரையாளி சைவ வித்தியாசாலை சற்றுத்தொலைவில் இருப்பதனால் அல்வாய் வடக்குப் பகுதியிலும் ஒரு பாடசாலை நிறுவப்படவேண்டும் என்ற நோக்கில் 1937ஆம் ஆண்டு க.மு அவர்களால் இன்றைய அரசடி விநாயகர் ஆலயத்திற்கருகில் அடிக்கல் நாட்டப்பட்டபோதும் பல்வேறு காரணங்களால் பின்னர் அது கைவிடப்பட்டது.

இவ்வாறிருக்கையில் 1954ஆம் ஆண்டு தேவரையாளி சைவவித்தியாசாலையில் ஏற்பட்ட உள் முரண்பாடு காரணமாக பாடசாலையின் அதிபர் அமரர் மு. செல்லையா அவர்கள் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படுகிறார். இதனால் கவிஞர் மு.செ. அவர்கள் தனது வேலையை இழக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

## சிறப்புக் கட்டுரை

க.மு அவர்களும், கவிஞர் மு.செ. அவர்களும் பிரிக்க முடியாத ஒரு முகத்தினர்.

இந்த வேளையில் அல்வாய் வடக்குப் பகுதியில் ஒரு பாடசாலை நிறுவவேண்டும் என 1937ஆம் ஆண்டு இடப்பட்ட அடிக்கல் க.மு அவர்களின் மனதில் மீண்டும் பொறி தட்டத் தொடங்குகிறது.

க.மு அவர்கள் மீது அன்பும் மரியாதையும் கொண்ட வட அல்வை மக்களின் நிதி, பொருள், சரீர உதவியுடன் 1954ஆம் ஆண்டு இன்றைய அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை உதயமாகிறது. இப் பாடசாலையின் முதல் அதிபர் பொறுப்பை கவிஞர் மு.செ. அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார். இந்த வகையில் கவிஞர் மு.செயின் கல்விப்பணி தொடர வழிசமைத்தது அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையென்றால் மிகையாகாது.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் தோற்றத்தின் பின்னர் க.மு. அவர்களின் வீட்டுக்கு வருகை தந்த இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்கள் புத்தூர் பகுதியில் ஒரு பாடசாலை அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றார். இந்த வேளையில் புத்தூர் பகுதி மக்கள் தமக்கு ஒரு பாடசாலை உருவாக்கப்படவேண்டும் என்ற நோக்கில் அவர்களது உறவினரான கரவெட்டி இரத்தின வாத்தியாருடன் தொடர்பை ஏற்படுத்துகின்றனர். இரத்தின வாத்தியார், புத்தூர்ப்பகுதி மக்களின் கருத்தை க.மு. அவர்களுக்கு தெரிவித்தது மட்டுமன்றி அம் மக்களுக்கும் க.மு. அவர்களுக்கும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்.

இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களினதும் புத்தூர் வாழ் மக்களினதும் வேண்டுகோளுக்கிணங்க க.மு. அவர்கள் தேவரையாளி இந்துக் கல்லூரியிலிருந்து வெளியேறி புத்தூர் கிராமத்தின் பக்கம் தனது பார்வையைத் திருப்புகின்றார். க.மு. அவர்களின் வழிகாட்டலுடனும் புத்தூர் வாழ் மக்களின் பெரும் பங்களிப்புடனும் 1957ஆம் ஆண்டு இன்றைய புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் தோற்றம் பெறுகிறது. இதன் முதல் அதிபர் பொறுப்பைக் க.மு. அவர்கள் ஏற்றுக்கொண்டதுடன், அல்வாயிலிருந்து வெளியேறிப் புத்தூரையே தனது வாழ்விடமாக்கியும் கொண்டார்.

இப் பாடசாலையை அரசு கையேற்க வைத்த பெரும் பணியைச் செய்தவர் அன்றைய தமிழரசுக்கட்சியின் கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தையே சாரும்.

1942ஆம் ஆண்டு காலப் பகுதியில் "வடமராட்சி சமூக சேவா சங்கத்தின்" சிந்தனையில் கிராம சபைத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களும் போட்டியிட்டு கிராமசபை உறுப்புரிமையைப் பெறவேண்டும் என்ற ஆவல் உருவாகிறது. இதனடிப்படையில் 1943ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஐவர் வடமராட்சிப் பகுதியில் போட்டியிட்டபோதும் க.மு. அவர்கள் மட்டுமே வெற்றி பெற்று கட்டைவேலிக் கிராமசபை உறுப்புரிமை யைப் பெறுகின்றார். இப்புதுமையான நிகழ்வு அவரது மக்கள் மத்தியில் எழுச்சியான வெற்றியாகக் கொண்டாடப்படுகிறது. இவ் வெற்றிக்கு அல்வாய் வடக்கு மக்களின் துணிவும் அர்ப்பணிப்பும் பெரும் பங்காக இருக்கிறது.

க.மு. அவர்கள் 1946ஆம் ஆண்டுத் தேர்தலிலும் வெற்றியடைந்து தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் கிராம சபை உறுப்புரிமையைப் பெற்றபோதும் 1949ஆம் ஆண்டுத் தேர்தலில் தோல்வியைத் தழுவுகின்றார். இதனைத் தொடர்ந்து பெரும் சாதிக்கலவரம் ஏற்படுகிறது. அரச காவல்துறையினர் வழமைபோல உயர் சாதியினருக்கு ஆதரவாகவே செயற்படுகின்றனர். இதனால் கலவரம் மேலும் வலுவடைகிறது. இதன் பொருட்டு க.மு. வின் ஆதரவாளர்களுக்கு எதிராக இருபத்தெட்டு வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. அத்தனை வழக்குகளையும் வெற்றியடைய வைத்த பெருமை அன்றைய சமசமாஜக் கட்சியின் பேராளர் அமரர் தர்மகுலசிங்கத்தையே சாரும்.

இதன் பின்னர் உயர் சாதியினர் நேரடியான மோதல்களைத் தவிர்த்து மறைமுகமான எதிர்ப்புக்களைக் காட்டத் தொடங்கினர். அந்த வகையில் கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு தமது காணியில் உள்ள பனைகளைக் கொடுக்க மறுத்தனர். இதனால் சீவல் தொழிலையே தமது வாழ்வாதாரமாக நம்பியிருந்த மக்கள் பெரும் பொருளாதார நெடுக்கடிக்குள் தள்ளப்பட்டனர். இதற்குத் தீர்வுகாண எண்ணிய க.மு. அவர்கள் முல்லைத்தீவு, அலம்பில், திருகோணமலை போன்ற இடங்களில் தவறணைகளைக் குத்தகைக்கு எடுத்து இங்குள்ள சீவல் தொழிலாளர்களுக்கு அங்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தார்.

தமிழரசுக் கட்சியின் கொள்கைகளின் பால் ஈர்க்கப்பட்ட க.மு. அவர்கள் 1956ஆம் ஆண்டு சிறுபான்மைத் தமிழர் சார்பாக அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினராக இருந்து செயற்படுகின்றார். கட்சியில் இருக்கும்போது, தமிழரசுக்கட்சி தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்வதுடன் தீண்டாமை ஒழிப்பு மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும் என்றும், செனற் சபையின் சிறுபான்மைத் தமிழர் ஒருவருக்கு நியமனம் வழங்கப்படவேண்டுமென்றும் கோரிக்கைகளை முன்வைக்கின்றார். இந்த இரண்டு கோரிக்கைகளும் கட்சியால் உடனுக்குடன் நிறைவேற்றப்படுகின்றது.

இதுமட்டுமன்றி 1970ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு சிறுபான்மைத்தமிழர் ஒருவரை கட்சி வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கின்றார். இதன்பிரகாரம் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் அமரர் த. இராசலிங்கம் (M.A.) அவர்கள் நிறுத்தப்படுவதன் மூலம் அக் கோரிக்கையும் நிறைவேற்றப்படுகிறது.

**துன்னாலை சி.மகேந்திரன்**

நிற்க, 1957ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் 14ஆவது மாநாடு யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறஇருக்கிறது. இம் மாநாட்டுக்கு தலைவராக மகாசபையின் உபதலைவர் க.மு. அவர்கள் தலைமை தாங்க இருக்கிறார். "சிங்களம் மட்டும்" மசோதா சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் யாழ். வர இருக்கும் அமைச்சர் எம்.பி.டி. சொய்சா அவர்களை வரவேற்று மாநாட்டுக்கு அழைத்து வருவதென மகாசபையும் அமைச்சருக்குக் கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவிப்பதென தமிழரசுக் கட்சியும் முடிவெடுத்துள்ளன. இதனால் மகாசபையின் நிர்வாகத்துக்குள் உள் முரண்பாடு அதிகரிக்கிறது.

பரபரப்பான சூழலில் அன்றை தினம் முற்பகல் 10.30 மணிக்கு மாநாடு கூட்டப்படுகின்றது.

(3114)

(12ஆம் பக்கம் பார்க்க...)








யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நா.சண்முகலிங்கன், ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் வளவாளர் பியானோ பாட்ரா ஆகியோர் உரையாற்றுவதையும், குறும்பட காட்சிப்படுத்தலில் முதலிடத்தைப் பெற்ற மாணவனுக்கும், டிப்ளோமாப் பயிற்சி நெறியை முடித்த மாணவி ஒருவருக்கும் துணைவேந்தர் சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.கரன்)

# மாலைதீவுக்கு கடனுதவி வழங்குகிறது இலங்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மாலைதீவின் அமைச்சர் ஒருவர், விரைவில் இலங்கை வரவுள்ளார்.

மாலைதீவில், ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினையை நீக்கும் வகையிலேயே இந்தக் கடன் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக மாலைதீவு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ், மாலைதீவு பிரஜைகள் ரூபாய்களிலும் அந்த நாட்டின் நாணய அலகான ரூபியாவிலும் பரிமாற்றங்களை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என மாலைதீவு அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# வன்னி மாவட்ட பாடசாலைகளை புனரமைக்க கொரியா நிதியுதவி

(கொழும்பு)

வன்னி மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைக்க கொரியா முன் வந்துள்ளது.

இதன்படி வன்னியில் பாதிப்புக் குள்ளான ஏராளமான பாடசாலை களை மீண்டும் கட்டியெழுப்ப பல பில்லியன் ரூபாய்களை கொரிய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்காக கொரிய தூதுக்குழு ஒன்று வன்னி சென்று திரும்பியுள்ளது.

இந்த நிலையில் குய்கா எனும் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த பாடசாலைகள் அடிப்படை வசதிகளுடன் மீண்டும் கட்டியெழுப்பப் படவுள்ளதாக கொரிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# எமக்கு உரிமையில்லாத இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கக்கூடாது

## ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

எமக்கு உரிமையில்லாத இடங்களில் தேவையற்ற வகையில் பௌத்த விகாரைகளை அமைக்கக் கூடாது.

மக்களிடையே குரோதத்தை ஏற்படுத்தி மீண்டுமொரு ஆயுதப் போராட்டம் உருவாக நாம் இடமளிக்கக் கூடாது என்று ஐ.தே.கவின் தவிசாளர் காமினி ஜய விக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எந்த மதமாக இருந்தாலும் நாம் அதை மதிக்கவேண்டும். எமக்கு உரிமையில்லாத இடங்களில் பௌத்த விகாரைகளை அமைக்க வேண்டிய தேவை எமக்கில்லை. மக்களிடையே குரோதத்தை ஏற்படுத்தி மீண்டும் ஒரு பயங்கரவாதம் உருவாக நாம் இடமளிக்கக் கூடாது. (ஸ்ரீ-2)

# வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 60 மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோர்வூட் ஸ்டொக்கொம் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் தொற்றிக் கொண்டுள்ளதால் 60 க்கும் மேற்பட்ட மாணவர்கள் டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இப்பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் சிலர் மயங்கிய நிலையில் இருந்தமையால் உடனடியாக டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் நேற்றும் மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கவிரவெல, மாநெலி, மாக்கொல ஆகிய தோட்டங்களை சேர்ந்த மாணவர்களே இவ்வாறு ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கிளிநொச்சி இரத்தினபுரம் கிராமத்தில் புதிய குடும்பப் பதிவு நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் கிராமத்தில் புதியகுடும்பப்பதிவுகள்மேற்கொள்ளப்படவுள்ளன.

புனர்வாழ்வு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் வெளிமாவட்டத்தில் இருந்து இரத்தினபுரம் கிராமத்திற்கான புதிய பதிவுகள் மேற்கொள்ளவுள்ளவர்கள், ஏற்கனவே குடும்பப்பதிவை மேற்கொண்டவர்களில் குடும்ப உறுப்பினர்களை இணைப்பதற்கான பதிவுகளை மேற்கொள்வோரும் நாளை சனிக்கிழமை இரத்தினபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் இராணுவத்தினரின் பதிவுகளும் அன்றையதினம் மேற்கொள்ளப்படும் என இரத்தினபுரம் கிராம அலுவலர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# அமரர் முருகேசனார்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மாநாட்டின் தலைவர் க.மு. அவர்கள் பின்வருமாறு உரையாற்றுகிறார். "நாங்களும் தமிழர்கள்தான் உயர் சாதித் தமிழர்கள் என்று கூறப்படுபவர்கள் எங்களுக்கு அநீதி செய்கிறார்கள். அதற்காக, நாங்கள் அவர்களை விட்டு விலகிப் பிரிந்து செல்ல முடியாது. அவர்களுடன் சேர்ந்திருந்து வாழ்ந்துதான் எங்கள் மனித உரிமைகளைப் பெறவேண்டும் சலுகைகளுக்காக இனத்தை விற்றால் எதிர்கால சமூகம் எம்மை மன்னிக்காது ..." என்ற தூர நோக்க சிந்தனையுடன் தனது கருத்தை முன்வைத்து அன்றிலிருந்து மகாசபையின் தொடர்பை அறுத்துக் கொள்கிறார்.

இதனைத் தொடர்ந்து 1957ஆம் ஆண்டு க.மு. மற்றும் கவிஞர் மு.செ, ஆ.ம. செல்லத்துரை (ஆசிரியர்) போன்றவர்களால் தமிழரசுக்கட்சியின் பின்புலத்துடன் நல்லூர் கந்தசுவாமி கோயில், வண்ணார்பண்ணை சிவன் கோயில், பெருமாள்கோயில் போன்றவற்றில் ஆலயப் பிரவேசம் நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து இவ்வாலயங்களுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களும் சென்று வழிபடக் கூடிய நிலை ஏற்படுகிறது.

கதர் ஆடை உடுத்து காந்தீய வாழ்வு வாழ்ந்த தேவரையாளி சமூகப் பெரியார்களால் அகிம்சை வழியில் மேற்கொள்ளப்பட்ட அற்புதமான சாதனை இதுவாகும்.

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஒன்பதாம் திருவிழா அல்வாய் வடக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்காக இருந்து வருகிறது. வழமைபோலன்றி அன்றைய திருவிழாவின்போது உபயகாரர்களால் கற்பூரச் சட்டி எடுப்பதற்கான ஏற்பாடுகள் க.மு. அவர்களால் செய்யப்பட்டிருந்தது. ஆனால் உயர்சாதியினர் கற்பூரச் சட்டி எடுப்பதைத் தடுத்து நிறுத்துகிறார்கள். இதனால் வேதனையடைந்த க.மு. அவர்கள், "எல்லோரும் வாருங்கள் பௌத்த மதத்தைச் சேருவோம்" என இருபத்தேழாம் திகதி மே மாதம் 1953ஆம் ஆண்டு துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டது மட்டுமன்றி தனது இல்லத்திற்கும் "சித்தார்த்தர் அகம்" எனப் பெயர் சூட்டிக்கொண்டார். க.மு.வின் வேண்டுகோளுக்கிணங்கி பல ஆண்களும் பெண்களும் காவியுடை தரித்தனர்.

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி அன்றைய காலகட்டத்தில் சாதி வரன்முறையைப் பேணுகின்ற ஒரு கல்லூரியாகவே இருந்து வந்தது. இந்தவேளையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை யில் கல்விகற்றுக் கொண்டிருந்த தனது மகள் இந்திராவதி (திருமதி காரை சுந்தரம்பிள்ளை) அவர்களை அரசினர் பகிரங்கப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒரு ஆண்டுகளே இருக்கும் நிலையில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூ ரியில் சேர்த்ததன் மூலம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் அப் பாடசாலையில் கல்வி கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த நோக்கம் கருதியே புத்தூர் சோமஸ் கந்தக் கல்லூரியிலும் தனது மூத்தமகன் கந்தவரோதயன் அவர்களைச் சேர்த்துக்கொண்டார்.

இப்படியாக சமயம், கலை, கல்வி, சமூகம், அரசியல் எனப் பல்வேறு விடயங்களையும் தன் தோளிலே சுமந்து நடந்து சென்ற க.மு. அவர்கள் வாழும் காலத்திலேயே புத்தூரில் "**சேவாதிலகம்**" என்று பட்டமளித்து கௌரவிக்கப்பட்டது மட்டுமன்றி அல்வாயில் பவளவிழா எடுத்து "**வட அல்வை முருகேசனார்**" என்ற பவள விழா மலரும் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. மேலாக அமரரின் 31ஆம் நாள் நினைவுமலராக "**வட அல்வை முருகேசனார் பன்முகப் பார்வை**" என்ற நூலும் வெளிவந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு மகவுக்கு அளித்திடும்போது இரு மகவும் கைநீட்டும் ;மும்மகவும் கைநீட்டும். பொருமி ஒரு மகவு அழும்.என் செய்வாள் பெரிதும் பாவம்... ~ குசேல பாக்கியாயனம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யார் பாவம் செய்தாரோ அவரே பிராயச்சித்தம் செய்ய வேண்டும்

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நாளைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

இந்திய உதவித் தூதரகத்தை திறந்து வைப்பதற்காக யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் கிருஷ்ணாவிடம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு ஏராளம்.

குசேலர்,கிருஷ்ண பரமாத்மாவை எத்துணை எதிர்பார்ப்புக்களுடன் சந்தித்தாரோ அதனை விடப் பல மடங்கு அதிகமான எதிர்பார்ப்பை யாழ்ப்பாணம் வரும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பட்ட துன்பம் கோடிக் கணக்கு.அதைவிட, தமிழன் என்ற மிடுக்கு குலைந்து மானம் போய், வாய் மூடி மௌனிகளாக இருக்கும் துயரம் மறுபுறம்.

உலகில் எந்த இனத்திற்கும் இந்தக் கதி ஏற்படக்கூடாது என்ற அளவில் நாங்கள் பட்ட துயரம் ஏராளம்.

ஆரோக்கியமான அரசியல் தலைமை இல்லை.ஒற்றுமை இல்லை.எங்கள் இளம் சமூகத்திடம் இப்போது இனப்பற்று இல்லை. எல்லாம் களியாட்டம்; வெறியாட்டம்; கைத் தொலைபேசியில் விரசம்.

ஆ! கடவுளே !என்ன மாதிரி இருந்த இனத்திற்கு இப்படி வாழ்மானம் வந்ததே என்று தலையில் அடித்து கிருஷ்ணா! கிருஷ்ணா! கற்றைக் குழல் பிடித்து,

கோவிந்தா! அற்றைக்கு திரௌபதி மானம் காத்த நீ இற்றைக்கு எங்களை காத்தருள மாட்டாயோ என்று ஏங்கும் வேளையில்,

கிருஷ்ண நாமத்தில் இந்திய தேசத்தின் வெளியுறவு அமைச்சர் யாழ்ப்பாணம் வருவது மிகவும் முக்கியமான விடயமே.

யாழ்ப்பாணம் வரும் கிருஷ்ணாவிடம் எங்கள் பிரச்சினையை எடுத்துக் கூறுவோம்.

ஐயா கிருஷ்ணா!

பாவம் செய்தவனே அதற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென 'மனுஸ்மிருதி' வேதம்சொல்கிறது.ஆகவே கிருஷ்ணா! இந்திய தேசம் தான் அந்தப் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும்.

இந்தியாவைத் தவிர இலங்கைத் தமிழரின் பிரச்சினையை யாராலும் தீர்க்க முடியாது என்ற நிஜத்தை இடித்துரைப்போம்.

கிருஷ்ணாவின் மனம் இரங்கட்டும். சோனியா அம்மையார் மனம் மாறட்டும்.

அட ! கூடவே கலைஞர் கருணாநிதி கடிதம் எழுதட்டும்.தமிழர் பிரச்சினை தீர்ந்தால்தான் இலங்கைத் தீவில் அமைதியும் சாந்தமும் நிலைபெறும் என்ற பேருண்மையை பௌவியமாகக் கூறுவோம்.

# மக்களை நெறிப்படுத்தும் துறைகளில் ஊடகங்களுக்கு முக்கிய பங்குண்டு

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

ஊடகங்களின் செயற்பாடுகள் சமூகத்திற்கு நம்பிக்கையை தரக்கூடியவை. மக்களின் அன்றாட வாழ்வியலோடு ஒன்றிணைந்து பணிபுரிவது ஊடகத்தின் இயல்பு என யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஊடகங்களில் வரும் தகவல்களை மதிப்பீடு செய்வது அவசியமானது. மதிப்பீட்டின் மூலமே அதன் கருத்தினை முழுமையாக அறிய முடியும். சமூக மேம்பாட்டிற்காகவும் தனிமனித மேம்பாட்டிற்காகவும் பணி புரிவது ஊடகங்களேயாகும்

ஊடகங்களின் வளமான சேவையால், சமூகங்கள் முன்னேற்றமடைகிறது.யதார்த்தமான விடயங்களை வெளிப்படுத்துவதில் ஊடகங்களின் பணி போற்றுதலுக்குரியது.

உலகத்தில் 40 இற்கு மேற்பட்ட நாடுகளில் ஊடகக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது.மக்களினை நெறிப்படுத்தும் துறைகளில் ஊடகத்திற்கு முக்கிய பங்குள்ளது. ஊடகங்கள் இரு பிரிவாக தொழிற்பட்டு வருகிறன. அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் என இரு பிரிவுகள் உள்ளன.

ஊடகப் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் இந்த மாணவர்களில் மிக சிறப்பானதொரு எதிர்காலம் தெரிகிறது. ஊடகக் கல்வியை பெற விரும்பும் மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக ஊடக உயர் கல்விப் பிரிவுக் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே சமூகத்திற்கு நம்பிக்கை தரக்கூடிய இந்த ஊடகத்துறை மென்மேலும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## வழிபாட்டின் மூலம் ஆன்மாவை உணரலாம்

திருக்கோயில் கோபுரத்தை கடந்து உள்ளே சென்றால் பிரகாரம் உள்ளது. பொதுவாகக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பிரகார மதில் சுவர்கள் மறைத்துக்கொண்டுள்ளன. இறைவனை எல்லாத்திசைகளில் இருந்தும் காண முடிவதில்லை. பிரதான வாயில் என்று சொல்லப்படுகின்ற கிழக்கு வாயில் வழியாகவே சென்று கண்டு வழிபட முடிகின்றது.

இறைவனை மறைத்துக் கொண்டிருக்கும் மதில் சுவர்கள் மனிதன் தன்னிடத்தில் உள்ள ஆன்மாவை, தான் ஆன்மா என்ற உண்மையை எளிதில் அறிய முடியாத வகையில் ஆன்மாவை மறைத்துக்கொண்டுள்ள உடம்பை உணர்த்துகின்றன. மதில் சுவர்கள் இல்லை என்றால் எந்தத் திசையில் இருந்தும், இறைவனைக் கண்டு எப்பொழுதும் வழிபடலாம். பிரகார மதில் சுவர்களின் மறைப்பு, உடம்பின் மறைப்பை உணர்த்துகின்றது. பிரதான வாயில் என்று சொல்லப்படுகின்ற கிழக்கு வாயில் வழியாகவே இறைவனைக் காணமுடிகிறது. இறைவழிபாட்டின் வாயிலாகவே ஆன்மா என்பதை மனிதன் உணர முடிகின்றது.

# சீமானின் வழக்கு ஒத்திவைப்பு

தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சீமான் கைது செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து அவரது சகோதரால் தொடரப்பட்ட வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சிறையில் அடைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து சீமானின் சகோதரர் ஜேம்ஸ் பீட்டர் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு விசாரணை நீதிபதிகள் சொக்கலிங்கம், கண்ணன் முன்னிலையில் நடந்தது. அப்போது சீமான் தரப்பு சட்டத்தரணி நடராஜன் இந்த வழக்கு விசாரணையை விரைவில் முடிக்க வேண்டும் எனக் கூறினார்.அப்போது அரசு தரப்பில் சட்டத்தரணி வாதிட இருப்பதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கை நீதிபதிகள் அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (ஸ்ரீ-2)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

150

இறைவனை உணர்வது எல்லோருக்கும் கைகூடாது. மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றையும் ஒருமுகப்படுத்தினால் இறைவன் அருளை உணரலாம். நாம் செய்யும் நல்வினையையும் தீவினையையும் பகுத்தறியும் மனப்பக்குவம் ஏற்படும் போது இறைவனைப் பற்றிய எண்ணம் தெளிவடையும். தீவினைகளை அறுக்க வல்ல இறைவன் திருவருள் புரியும். ஆனால் நாம் இறைவனைப் பற்றி ஆழமாக எண்ணுவதில்லை. நினைப்பதுமில்லை. எமக்கு ஏற்பட்ட வாழ்வியலனுபவத்தில் இறையருள் துணை நின்றதை மீள நினைப்பதில்லை. பிறருக்கு இறையருள் கிடைத்த நிலைகளை எண்ணிப் பார்ப்பதில்லை. எல்லாம் எம்முடைய ஆற்றலுக்கு உட்பட்ட செயற்பாடுகளென எண்ணி இறுமாந்திருக்கின்றோம்.

இந்த நிலை உலகியலில் பொதுவானதே. எனினும் இந்த எண்ணம் களையப்படவேண்டும். இறைவன் பற்றிய நினைவோடு வாழ வேண்டும். சுந்தரருடைய வாழ்வியலனுபவம் இதனை எமக்கு நன்கு உணர்த்தி நிற்கிறது. சுந்தரர் வாழ்வில் இன்பத்தையே பெரிதும் விரும்பியவர். இருமனைவியரோடு வாழ்ந்தவர். அதனால் துன்பங்களையும் அநுபவித்தவர். அவருடைய வாழ்க்கையனுபவம் இறைவன் பற்றிய எண்ணத்தை வலுப்படுத்தியது. துன்பங்களிலிருந்து விடுபட இறைவனை நினைப்பதே சிறந்தது என்ற நிலைக்கு ஆற்றுப்படுத்தியது.

கழுமல வளநகரில் இறைவனைக் கண்ட போது அவர் உண்மையை உணர்ந்து கொண்டார். தான் செய்த தீவினைகளை அறுக்க வல்லவன் இறைவனே என்பதை அறிந்து கொண்டார். தன்னுடைய அனுபவத்தைப் பாடலிலே பதிவு செய்துள்ளார். இறைவனைத் தவிர வேறு எவருடைய நினைவும் அவருக்கு ஏற்படவில்லை. அத்தகைய இவ்வளவு காலமும் வாழ்ந்த வாழ்க்கையின் நிலை பயனற்றது என்பது தெரிகிறது. அதை வெளிப்படையாகவே கூறுகிறார். கனவு வாழ்க்கையிலிருந்து தான் விழித்துக் கொண்டதாகக் கூறுகிறார். மனத்திலே இருந்த திருநடனம் செய்யும் திருக்கோலத்து இறைவனைக் திருக்கழுமலத் திருக்கோயிலில் நேரிலே கண்ட போது மெய்யறிவு பெறுகிறார். நான் மெய்யுணர்வு பெற்றதை உணர்வு பெற்றேன். உய்யும் காரணந்தன்னால் எனப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். தான் முன்னர் காணாது விட்டிருந்ததையும் நன்கு உணர்ந்துள்ளார். இத்தகைய உணர்வு நிலை மாற்றம் திருக்கோயில் வழிபாட்டி னால் ஏற்படும். சிறுவயதிலிருந்து எமக்குப் பயிற்றப்படும் வழிபாட்டு நடைமுறைகளைப் பற்றி நாம் ஆழமாக எண்ணிப் பார்ப்பதில்லை.அறிவார்ந்த நிலையில் அதுபற்றி அறிய முற்படுவதில்லை. இதனைச் சுந்தரர் தனது வாழ்வியலனுபவதினூடாக எடுத்து விளக்கியுள்ளார். இறைவனை மட்டுமே தான் காண்பதை 'ஒருத்தனையல்லது இங்கு யாரையும் உணரேன்' என்ற தொடர் மூலம் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். அவருடைய உள்ளத்தில் முன்னைய வாழ்வியலின் பயனற்ற தன்மை நன்கு உணரப்பட்டதைப் பாடல் நன்கு உணர்த்தி நிற்கிறது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

"திருத்தினை நகருறை சேந்தனப்
பனென்
செய்வினையறுத்திடுஞ் செம்
பொனையம் பொன்
ஒருத்தனையல்ல திங்காரையு
முணரே
னுணர்வு பெற்றேனுய்யுங் காரண
ந்தன்னால்
விருத்தனைப் பாலனைக் கன
விடை விரவி
விழித்தெங்குங் காணமாட்டாது
விட்டிருந்தேன்
கருத்தனை நிருத்தனை செய்
காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டு கொண்
டேனே."

# 75போர் விமானங்கள், 6ஆயிரம் வீரர்களுடன் அமெ.போர்க் கப்பல் தென்கொரியா விரைகிறது

## கடும் போர் மூளும் அபாயம்; உலக நாடுகள் அச்சம்!





(வோஷிங்டன்)

75போர் விமானங்கள், 6ஆயிரம் வீரர்களுடன் அமெரிக்காவின் யு.எஸ்.எஸ். வோஷிங்டன் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல், தென்கொரியாவின் ஜியோன் பியோங் தீவு நோக்கி நேற்று முன்தினம் விரைந்தது. இதனால் பயங்கரப் போர் வெடிக்குமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

வடகொரியா - தென்கொரியா நாடுகளில் எல்லையை ஒட்டிய கடல் பகுதியில் தென்கொரியாவுக்குச் சொந்தமான ஜியோன் பியோங் என்ற தீவு உள்ளது. இங்கு தென் கொரியாவின் இராணுவத் தளமும் உள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் தீவின் மீது வடகொரியா திடீரென பீரங்கித் தாக்குதல் நடத்தியது.50 இற்கும் மேற்பட்ட குண்டுகளை அந்தத் தீவின் மீது பீரங்கிகள் கக்கின. இந்தத் தாக்குதலில் அங்கிருந்த இராணுவவீரர்கள் 2பேர் பலியானார்கள்.

சிலவீரர்களும், பொதுமக்களுமாக 13பேர் காயமடைந்தனர். பல வீடுகளும் அலுவலகங்களும் இடிந்துசேதமடைந்தன. பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன. ஏராளமான பொருள் சேதம் ஏற்பட்டது.

தென்கொரியாவும் உடனே பதிலடி கொடுத்துத் தாக்கியது. இதனால் வடகொரியா - தென்கொரியா இடையே கடும் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. பேரழிவு ஏற்படாமல் தடுக்கும் வகையில் இருநாடுகளும் போர்நிறுத்தம் செய்யவேண்டும் என்றும் அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்த நிலையில் அமெரிக்காவின் 'யு.எஸ்.எஸ்.வோஷிங்டன்' என்ற விமானம் தாங்கிப் போர்க் கப்பல் தென்கொரியாவின் ஜியோன் பியோங் தீவுக்கு நேற்றுமுன்தினம் காலையில் விரைந்தது. அந்தக் கப்பலில் 75போர் விமானங்களும் 6ஆயிரம் வீரர்களும் உள்ளனர்.

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவிற்கு தெற்கே உள்ள கடற்படைத்தளத்தில் முகாமிட்டிருந்த அந்தக் கப்பல் ஞாயிற்றுக்கி ழமை ஜியோன் பியோங் தீவை சென்றடையும் என்னும் தென்கொரியாக் கடற்படையுடன் இணைந்து போரில் ஈடுபடுமென்றும் தென்கொரியா தலைநகர் சியோலில் உள்ள அமெரிக்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆனால் தென்கொரியாவுடன் சேர்ந்து நாங்கள் செயலாற்ற இருப்பது பாதுகாப்புக்காக மட்டுமே என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கப் போர்க்கப்பல் தென்கொரியாவுக்கு ஆதரவாக விரைந்துள்ளதால் வடகொரியாவின் தீவிர ஆதரவு நாடான சீனா, வடகொரியாவுக்கு ஆதரவாகப் போரில் இறங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருப்பதாக உலக நாடுகள் கருதுகின்றன. இதன் காரணமாக பெரிய அளவில் போர் வெடிக்குமோ? என்ற அச்சம் உலகநாடுகளிடையே புருவத்தை உயரச் செய்துள்ளது. (ஸ்ரீ)

# நியூசிலாந்து சுரங்கத்தில் மீண்டும் வெடிவிபத்து; அனைவரும் பலியாகியிருப்பதாக அச்சம்!

நியூசிலாந்து நாட்டில் 29 பேர் சிக்கிக் கொண்ட சுரங்கத்திற்குள் மீண்டும் ஒரு பயங்கரமான வெடிவிபத்து நிகழ்ந்ததால் அவர்கள் அனைவரும் பலியாகியிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. இத்தகவல் அந்நாட்டை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

நியூசிலாந்தின் மேற்குக் கடற்கரையோரப் பகுதியில் அமைந்துள்ள பைக் ரிவர் நிலக்கரி நிறுவனத்திற்கு சொந்தமான சுரங்கத்திற்குள் கடந்த வாரம் சிலர் பணியில் இருந்த போது வெடிவிபத்து நிகழ்ந்தது.




இதில் 29 பணியாளர்கள் உள்ளே சிக்கிக் கொண்டனர். இவர்களில் 17 வயது முதல் 62 வயது வரையிலான பலதரப்பட்ட வயதுடையவர்கள் இருந்தனர். பிரிட்டனைச் சேர்ந்த இரண்டு பேரும், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இரண்டு பேரும் அதில் இருந்தனர். அனைவருக்கும் தேவையான ஒட்சிசன் மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளேயே இருந்தன.

எனினும் சுரங்கத்திற்குள் பயங்கரமான விஷவாயுவின் தாக்கம் இருந்ததால் மீட்புப் படையினர் உள்ளே செல்ல இயலவில்லை. இரண்டு ரோபோக்கள் மூலம் விஷவாயுவின் அளவைக் கணக்கிட கடந்த 23 ஆம் திகதி முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அதேநேரம் மற்றொரு வழியாக துளையிட்டு விஷவாயுவை அளவிடும் பணியும் நடந்தது. பாறைகள் மிகவும் கடினமாக இருந்ததால் துளையிடும் பணி தொய்வடைந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் மற்றொரு மோசமான வெடிவிபத்து சுரங்கத்திற்குள் நிகழ்ந்துள்ளது. இது முதலில் நிகழ்ந்த வெடிவிபத்தை விட இரண்டு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருந்தது.

இவ்விபத்தில் உள்ளே சிக்கியிருந்தவர்கள் அனைவரும் சிக்கி இறந்து போயிருக்கலாம் என்று பொலிஸ் உயரதிகாரி காரி நோயல்ஸ் தெரிவித்தார்.

சுரங்கம் அமைந்துள்ள மாவட்டத்தின் மேயர் டோனி கோக்ஷ்ரூனும் இதை உறுதிப் படுத்தியுள்ளார். கடந்த ஐந்து நாட்களாக சிக்கிக் கொண்டவர்கள் மீட்கப்படுவர்என்ற நம்பிக்கையுடன் அவர்களின் உறவினர்கள் சுரங்கத்திற்கு வெளியே பதற்றத்துடன் காத்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் இச்செய்தி வெளியானவுடன் அவர்கள் கதறி அழுதனர்.



இது குறித்து பேட்டியளித்த பொலிஸ் உயரதிகாரி காரி நோயல்ஸ் இரண்டாவது முறையும் வெடிவிபத்து நிகழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

அதன் அடிப்படையில் பார்த்தால் உள்ளே ஒருவரும் உயிருடன் இருக்க முடியாது என்று தான் நம்ப வேண்டியிருக்கிறது என்று தெரிவித்தார்.

மேயர் டோனி கூறுகையில் நியூசிலாந்தின் கருப்பு நேரம் இது. இதை நம்பவே முடியவில்லை. அவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என தெரியவில்லை. அவர்கள் கதறி அழுகின்றனர். தரையில் விழுந்து புரள்கின்றனர். சிலர் கோபத்தில் கூச்சலிடுகின்றனர் என்று கூறினார்.

அந்நாட்டின் மின்துறை அமைச்சர் கொரி ப்ரவுன் லீ இதுகுறித்து தீவிர விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

1914 இல் வடபகுதியில் ஒரு சுரங்கத்திற்குள் சிக்கிக்கொண்ட 43 பேர் பலியாகினர். அதையடுத்து நியூசிலாந்தில் கடந்த ஒரு நூற்றாண்டில் நடந்த இரண்டாவது மிகப் பெரிய சோக சம்பவம் இது என கூறப்படுகிறது.(ஸ்ரீ-2)

# வெப்பமடைந்துவரும் ஏரிகள்; நாசா ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

உலகம் முழுவதும் கடந்த 25 ஆண்டுகளாக ஏரிகள் சூடாகி வருவதாக நாசா ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் நாசா மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஸ்நீடர் சைமன் ஹூக் ஆகியோர் செயற்கைக்கோள் வழங்கிய விபரங்களை வைத்து உலகம் முழுவதும் உள்ள 167 பெரிய ஏரிகளை ஆய்வு செய்தனர்.

கடந்த 85 ஆம் ஆண்டு முதல் ஏரிகளின் வெப்பநிலை குறித்து ஆய்வு செய்த போது சில் ஏரிகள் 1.8 டிகிரி பரனைட் அளவுக்கு வெப்பநிலை உயர்ந்து காணப்பட்டதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு ஐரோப்பாவில் உள்ள ஏரிகள் அதிகம் வெப்பமடைந்து காணப்படுகின்றன. சைபீரியா, மங்கோலியா, வடக்கு சீனா பகுதிகளில் மிதமான வெப்பம் அதிகரித்துள்ளது. பூமி கோளத்து தெற்குப் பகுதியில் உள்ள ஏரிகளில் அவ்வளவாக வெப்பம் உயரவில்லை.

வடக்கு ஐரோப்பாவில் ஏரிகளைச் சுற்றியுள்ள காற்றுப்பகுதியை விட தண்ணீர் பகுதியில் வெப்பம் அதிகரித்துள்ளது.ஏரிகளின் வெப்பம் அதிகரிப்பதால் பாசி அதிகம் படிந்து மீன் இனம் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# அணுசெறிவூட்டும் பணியை நிறுத்தியுள்ளது ஈரான்

(வியன்னா)

ஈரான் தனது அணுகுண்டுகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றம் சாட்டியிருந்தன.

இந்நிலையில் அணுகுண்டு தயாரிப்பதற்கான யுரேனியம் செறிவூட்டும் பணியை தொடர்ந்து செய்து வந்தது.

தற்போது யுரேனியம் செறிவூட்டும் பணியை ஈரான் நிறுத்தி வைத் துள்ளதாக ஐ.நா. பொதுச்சபையின் அணு கண்காணிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச அணுசக்தி முகவர் வழங்கியுள்ள நம்பகமான தகவலையடுத்து ஐ.நா.இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே ஈரான் 3.18 தொன் யுரேனியத்தை செறிவு படுத்தி இருப்பு வைத்துள்ளது. இதனைக் கொண்டு இரு அணுகுண்டுகள் தயாரிக்கலாம். (ஸ்ரீ-2)

# ஆஷஸ் டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பம்

# சிடில் வேகத்தில் சிதறியது இங்கிலாந்து



தனது 26-ஆவது பிறந்த நாளில் ஹட்ரிக் சாதனை படைத்த மகிழ்ச்சியில் சிடில்

(பிரிஸ்பேன்)

சிடில் ஹட்ரிக் சாதனையுடன் பந்து வீச்சில் அசத்த இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 260 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

கிரிக்கெட் அரங்கில் பரம எதிரிகளான அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று பிரிஸ்பேனில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆரம்ப துடுப்பாட்டவீரர் அணித் தலைவர் அன்றூ ஸ்ரோஸ் பூச்சியத்துடன் ஹில்பன் ஹயூசின் ஆட்டத்தின் இரண்டாவது பந்தில் ஹசியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி ஓட்டமெதனையும் எடுக்காமல் முதலாவது விக்கெட்டைப் பறிகொடுத்தது.

அடுத்துவந்த திரோட், குக்குடன் இணைந்து பொறுப்புடன் ஆட அணி மீண்டது.

எனினும் திரோட் 53 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட )29 ஓட்டங்களுடன் வோட்ஷனின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட்டாகி ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய பீற்றர்ஸன் நிதானமாக துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணி 100 ஓட்டங்களை எட்டியது.

### வந்தார் சிடில் சுருண்டது இங்கிலாந்து

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது பீற்றர்சன் 70 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட)43 ஓட்டங்களை எடுத்து சிடிலின் பந்துவீச்சில் பொன்டிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கொலின்வூட் 4 ஓட்டங்களுடன் சிடிலின் நேர்த்தியான பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து குக்குடன் இணைந்த பெல் பொறுப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

மறுமுனையில் குக் 127 பந்துகளில் அரைச்சதம் கடக்க இங்கிலாந்து அணி 150 ஓட்டங்களை எட்டியது.

### சிடில் ஹட்ரிக்

இந்த ஜோடி ஐந்தாவது விக்கெட்டுக்காக 72 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுக்க குக் 168 பந்துகளில் ( 6 பவுண்டரிகள் உட்பட)67 ஓட்டங்களை எடுத்து சிடிலின் பந்துவீச்சில்வோட்ஷனிடம்பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிரிர், பிரோட் அடுத்தடுத்து பூச்சியத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இதில் சிடில் 65 ஆவது ஓவரில் அடுத்தடுத்து மூன்று பந்துகளில் குக், பிரிர், பிரோட்டின் விக்கெட்டுக்களை பதம் பார்த்து ஹட்ரிக் சாதனை படைத்தார்.

அடுத்து சுவான் களமிறங்க மறுமுனையில் பெல் 103 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். எனினும் சுவான் 10 ஓட்டங்களுடன் சிடிலின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து அன்டர்ஸன் களமிறங்க மறுமுனையில் பெல் 131 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 76 ஓட்டகளை எடுத்து போகேற்கியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 260 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அன்டர்ஸன் 11 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் பீற்றர் சிடில் 16 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 54 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்ளையும், போகேட்கி 2 விக்கெட்டுக்களையும் ஹலிபன் ஹயோஸ், வோட்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹட்ரிச் 15 ஓட்டங்களையும் வோட்ஸன் 9 ஓட்டங்களையும் எடுத்தனர். இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இலங்கை முதல் இன்னிங்ஸில் 387

# மேற்கிந்தியத் தீவுகள் தடுமாற்றம்

(கொழும்பு)

மூன்றாம் நாள் ஆட்டம் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 டெஸ்ட் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிபடைந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் 5 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 387 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 268 பந்துகளில் (18 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 150ஓட்டங்களையும் பிரசன்ன ஜெயவர்த்தன 34 ஓட்டங்களையும் ஹேரத் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரோஷ் 5 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் சமி 2விக்கெட்டுக்களையும் பிராவோ, பென் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணிக்கு பாரத் 3, ஹயில் 30, சந்தர்போல் 08 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

எனினும் டேரன் பிராவோவின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஒரு மணி நேரம் முன்னதாக நிறுத்தப்பட்டபோது முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் பிராவோ 80ஓட்டங்களையும் நாஷ் 25 ஓட்டங்களையும் எடுத்தனர். களத்தில் டயானி பிராவோ ஒரு ஓட்டத்துடனும் போக் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் திலகரட்ண டில்சான் 2 விக்கெட்டுக்களையும் மெண்டிஸ், லக்மால், குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இப் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# திருக்கல்யாண உற்சவம்

ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் முருகப் பெருமான் வள்ளியம்மை திருக்கல்யாண உற்சவம் இன்று காலை 9.00 மணிக்கு விசேடபூசை அபிசேக வழிபாடுகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து வள்ளியம்மை திருமண படல கந்த புராணப் படனம் இடம் பெறும்.

தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு திருக்கல்யாண விழாவும் சண்முக அர்ச்சனையும் அதனைத் தொடர்ந்து வள்ளி திருமண திருவிழா வீதி உலா வருகையுடன் உற்சவம் நிறைவுபெறும். (ச-7)

# திருநெல்வேலி சந்தைக்குள் மழைநீர்

# அவலத்தில் மரக்கறி வியாபாரிகள்





(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தைக்குள் மழைநீர் உட்புகுவதால் மரக்கறி வியாபாரிகளும் பொதுமக்களும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாட்களாக கடும் மழை பெய்து வருகின்றது. இந்நிலையில் திருநெல்வேலிச் சந்தைக் கட்டடத் தொகுதிகள் புனரமைக்கப்பட்டு பூர்த்தியாகாததால் அதனுடாக மழை நீர் உட்புகுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதனால் சந்தையின் உட் புறங்களில் மழைநீர் தேங்கிக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் சகதி நிலங்களினூடாக மக்கள் சந்தைக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் மரக்கறி வியாபாரிகளும் மழை நீருக்குள் இருந்தவாறே தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மழை நீருக்குள் மரக்கறிக் கழிவுகள் காணப்படுவதால் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரப்பிரச்சினைகளையும் ஏற்படுத்தும்நிலை காணப்படுவதாக வியாபாரிகள் கூறினர். இதேவேளை தினமும் நேரம் தவறாது பணத்தை வசூலிப்பதற்காக பற்றுச் சீட்டுடன் வரும் பிரதேச சபை வரி வசூலிப்பவர்கள் நாம் வியாபாரம் செய்வதற்கான ஏற்ற சூழலை செய்து தரமறுக்கின்றார்கள் என திருநெல்வேலி நவீன சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரி ஒருவர் கூறினார்.

பழைய சந்தையுடன் இணைந்தே புதிய கட்டிடமும் புனரமைக்கப்பட்டு வருவதால் பழைய கட்டிடத்தின் பகுதிகள் ஒழுங்காக சீராக்கப்படாததால் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. வடிகாலமைப்பு முறையற்ற விதத்தில் காணப்படுகின்றது.

தற்போது மழை தொடர்ந்த வண்ணமுள்ளதால் சந்தைப் பொருட்கள் அனைத்தும் மழையில் நனைவதுடன் வியாபாரிகளும் பொது மக்களும் மழையில் நனைந்தே பொருட்களின் விற்பனை மற்றும் கொள்வனவில் ஈடுபட்டுவருகின்றனர்.

சந்தையின் வடிகால்கள் முறையாக அமைக்கப்படாமையினாலும், பொருட்களின் கழிவுகள் சீராக அகற்றாமை காரணமாகவும் வடி காலுக்குள் கழிவுகள் தேங்குவதால் தண்ணீர் வழிந்தோட வழியில்லாது சந்தையின் நடைபாதைக்குள்ளேயே தேங்கிநிற்கின்றது எனவும் அவர் கூறினார். (ச-5)

# கிருஷ்ணா தலைமையிலான குழு...

நிருபமா ராவ் உட்பட இருபது பேர் கிருஷ்ணா வுடன் வந்துள்ளார்கள்.

விமான நிலையத்திற்கு நேரில் சென்று எஸ்.எம்.கிருஷ்ணாவை இலங்கை வெளி நாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வர வேற்றார்.

இலங்கையின் வெளிநாட்டமைச்சரை உத் தியோகபூர்வமாக கிருஷ்ணா இன்று சந்திக் கிறார். பின் இரு அமைச்சர்களும் மாலை கூட்டாக ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தவுள்ளனர். கிருஷ்ணா நாளை யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய்து இந்தியத் துணைத் தூதரகம் மற்றும் வீட்டுத் திட்டங்களை ஆரம் பித்து வைப்பார்.

இதேவேளை இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையில் வருடாந்தம் பாதுகாப்பு தொடர் பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற் கான தன்மைகள் குறித்தும் இந்திய வெளி விவகார அமைச்சர் கிருஷ்ணாவின் விஜயத் தின்போது ஆராயப்படவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேவேளை வட பகுதியில் போரின்போது இடம்பெயர்ந்த மக்களுக்காக 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விஜயத்தின் போது இந்தியா உறுதியளித்திருந்தது.

இதன் ஒரு அங்கமாக விரைவில் ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தை அங்கு ரார்ப்பணம் செய்யும் நிகழ்விலும் இந்திய வெளி விவகார அமைச்சர் கிருஷ்ணா கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டை யிலும் தனது தூதரங்களை இந்தியா திறந்து வைப்பது இலங்கையில் தனது பிரசன்னத் தை இந்தியா விரிவுபடுத்துகிறது என்பதை வெளிப்படுத்துவதாக இந்திய ஆங்கிலப் பத் திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அதாவது சீனாவுக்கு இரண்டாவது இடத் தில் இந்தியா இருக்கப்போவதில்லை என விடுக்கப்படும் செய்தியாக இது காணப்படு கிறது என அப்பத்திரிகை குறிப்பிடுகிறது.

இலங்கையில் பாரிய இரு உள்சார் கட்ட மைப்பு திட்டங்களாக அம்பாந்தோட்டை மற் றும் கொழும்புத் துறைமுக அபிவிருத்தித் திட் டங்கள் உள்ளன.

இந்தியாவின் கோடிப்புறத்தில் சீனா நேரடி சவாலாக காணப்படுவதாக நோக்கப்படும் நிலையில், இலங்கையில் தனது செயற்பாட் டை மீள ஏற்படுத்திக்கொள்வதற்கு இந்தியா முயற்சித்து வருகிறது.

இதில் பாதுகாப்பு உடன்படிக்கை தொடர் பான பேச்சை மீள ஆரம்பித்தல் மிகவும் முக் கியமானதென்ற நிலைப்பாட்டை புதுடில்லி கொண்டுள்ளது என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# இராணுவ...

அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு தொலைக்காட்சி ஊடகமொன் றுக்கு அளித்த பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேயர்களினால் அனுப்பி வைக்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த செவ்வி அமையப் பெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஓர் ஜனநாயகத் தலைவரா என நேயர் ஒருவர் தொடுத்திருந்த கேள்விக்கு பதிலளித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ச-5)

# நியூயோர்...

ஊடகத்தில் வெளியான கட்டுரை உண் மைக்குப் புறம்பான தகவல்களைக் கொண் டது எனவும், திரிபுபடுத்தப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஒருபக்கச் சார்பாக செய்தி வெளியிடப்பட்டுள்ள தாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# நேற்று நால்வர் சத்...

மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சராக சரத்குமார குணரத்ன மற்றும் பொது நிர்வாக பிரதி அமைச்சராக விஜய தஹ நாயக்கா ஆகியோரே இவ்வாறு சத்தியப்பிர மாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண் டாவது தவணைக்கான பதவிக் காலம் ஆரம்ப மானதை அடுத்து அமைச்சரவையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் அவர் களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த திங் கட்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் நடை பெற்றது.

இந் நிலையில் பிரதமர் உட்பட 10 சிரேஷ்ட அமைச்சர்கள், 50 அமைச்சர்கள் மற்றும் 31 பிரதியமைச்சர்கள் அன்றைய தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். இந்நிலை யில் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர் களின் எண்ணிக்கை 91 ஆக காணப்பட்டது. அந்த எண்ணிகை நேற்று 95ஆக அதிகரிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5,7)

# முறிகண்டி கோவில்...

குறித்த கோவிலை பலவந்தமாக பெற்றுக் கொண்டதால் அதன் பின்னர் தான் இந்தியா வுக்குச் சென்றதாகவும் அவர் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தோல்விய டைந்த நிலையில் மேற்படி கோவிலை தன் னிடம் ஒப்படைக்க வேண்டுமென உரிய அதி காரிகளிடம் கோரிய போதிலும் அதனால் எவ் வித பயனும் இல்லை என அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை குறித்த கோவிலுக்குச் சேர வேண்டிய பணம் இந்துக் கலாசார விவகார திணைக்கள பணிப்பாளர் மேற்பார்வையில் கொழும்புக்கு அனுப்பப்படுவதாகவும் முன் னாள் தர்மகர்த்தா தனது மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# விபத்தில்...

ருந்த பிரஸ்தாப யுவதி சைக்கிள் சறுக்கி நிலத் தில் விழுந்தபோது பின்னால் வேகமாக வந்த இலங்கை மின்சார சபையின் கனரக வாகனம் அவருக்கு மேலால் ஏறிச் சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அவ் யுவதியின் சடலம் மரண விசாரணை யின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டது. இவ்விபத்துகுறித்து யாழ். மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ.ஆனந்தராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ச-5,6)

# கூட்டமைப்பிலிருந்து...

அவர் தொடர்பான விசாரணைகள் இன்ன மும் நடைபெற்றுவருவதாகவும் சுரேஷ் பிரே மச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அம்பாறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பியசேனவை இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நீக் குவதாயின் உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் 8ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 18வது அரசியல மைப்புத் திருத்தச் சட்டமூலத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினரான பியசேன ஆதரவாக வாக்களித்தார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அர சியலமைப்புத் திருத்தச் சட்டமூலத்திற்கு எதி ராக வாக்களித்திருந்தனர்.

இந்நிலையில் அம்பாறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பியசேன 18வது அரசியல மைப்புத் திருத்தச் சட்டமூலத்திற்கு ஆதரவு அளித்தமை தொடர்பாகவும், அவரின் கட்சி உறுப்புரிமை தொடர்பாகவும் விசாரணை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக் கது. (ச-5)

# படையினரின் 26 எலும்...

பிடிக்கப்படும் படையினரை இந்த முகாமுக்கு கொண்டு சென்று புலிகள் தடுத்து வைத்திருந்த தாக சொல்லப்படுகிறது. போர் தீவிரமாக இடம்பெற்று படையினர் முல்லைத்தீவை நோக்கி முன்னேறியபோது இந்தப்படையி னர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனக்கூறப்படுகின்றது.

2009ஆம் ஆண்டு கொலை செய்யப் பட்டு புதைக்கப்பட்ட இராணுவம், கடற்படை யினரது எலும்புக் கூடுக ளே கடந்த சிலநாட்களாக தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு அதிகாரி மேலும் கூறினார்.

புலிகளால் பிடித்துச் செல்லப்பட்ட ஐ.வி.ஜெய ரட்ணமும் இங்குதான் கொல்லப்பட்டு புதைக் கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடந்த இரண்டு நாட்களாக தோண்டி எடுக் கப்பட்ட எலும்புகள் முல்லைத்தீவு சென்றுள்ள அதிகாரிகளால் பரிசோதனைக்குள்ளாக்கப் பட்டது. இவற்றை கொழும்புக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதி காரிகள் தெரிவித்தனர். (ச-5)

STUDY IN UK

IELTS அவசியமில்லை

யாழ்.நகரில் மிகக் குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்.

JANUARY ADMISSONக்கான இறுதிவாய்ப்பு

- கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
- மிகக்குறைந்த செலவில் Sponsor வசதிகள்.
- பிரபலமான சட்டத்தரணிகளின் வழிகாட்டல் உதவியுடன்
- குடும்பமாக கல்வி பயிலக்கூடிய வாய்ப்புகள்
- லண்டனில் உயர்தரப் பல்கலைக் கழகங்கள் /கல்லூரிகளில் அனுமதி
- Visa வுக்கான 100% உத்தரவாதம்
- மிகக்குறுகிய காலத்தில் பயணம் செய்யலாம்.
- Interview இன்றி 3 நாட்களில் கல்லூரி அனுமதிகள்.

தொடர்பு: 0770871616

அலுவலக விலாசம்
245,பலாலி வீதி,கந்தர்மடம்.
(Baby Photo அருகாமை)

அலுவலக நேரங்கள்
திங்கள் - சனி வரை
காலை 9.00-பி.ப.3.30

(3121)

MyWay English 3 மாத சனி ஞாயிறு பயிற்சிநெறி

~~Grammar~~

எந்தவொரு மொழியும் முதலில் பேச வேண்டும்
பேசுவதற்கு இலக்கணம் கற்க வேண்டியதில்லை
இலக்கணம் கற்பதால் ஆங்கிலம் பேச முடியாத நிலை ஏற்படும்

பேசுதல் என்பது இலக்கண ரீதியாக வசனங்களை உருவாக்குவதோ அல்லது தமிழ் வசனங்களை ஆங்கிலத்திற்கு மொழி மாற்றுவதோ இல்லை

தமிழ் தொடர்பில்லாத புதிய ஒரு Channel இனை உருவாக்குவதன் மூலம்
இலக்கணம் தெரிந்தவர்கள் மட்டுமன்றி ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும்
3 மாதத்தில் மிக இலகுவாக சரளமாக ஆங்கிலத்தினை பேச முடியும்

ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

ஆரம்பம் : 27.11.2010 காலம் : 3 மாதங்கள்

பிரிவுகள் : காலை 8 – 9, 10 – 11, மாலை 1 – 2, 3 – 4, 4 – 5, 5 – 6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

தனியார் அலுவலர், வங்கியாளர், மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை

பல்கலைக்கழகம் பூர்த்திசெய்து அரச பணி நியமனம் பெறாதோரும் பயிற்சியில் சேரலாம்

MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456

பணிநிலை வேண்டுகை

- கணனி பக்க வடிவமைப்பாளர் (ஆண்) Graphics Designer
- நேரச்சு பழகுனர் (ஆண்) Offset Machine Helpers (KORD)
- நிர்வாக உத்தியோகத்தர் (பெண்) Office Clack
- இரவு நேரக் காவலாளி (ஆண்) Night Security
- அலுவலக உதவியாளர் (ஆண்) Office Boy
- புத்தகம் கட்டுனர் (பெண்) Book Binder

முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும்

(யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் )

விண்ணப்பதாரிகள் நவம்பர் 27,28 ஆம் திகதிகளில் நேரில் வரவும்

கரிகணன் பிறிண்டேர்ஸ்
424 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.